போன் நெ. 15. விலை 2 அணா. REGD. NO. 4642

திராவிடநாடு

மலர் 12 | 3—1—54 | இதழ் 27

அவருக்கு ஏற்பட்ட அதிர்ச்சி

[அடிகள்]

★

"மற்றவர்களுக்கும் எனக்கும் இருக்கிற வித்தியாசம் ஒன்றே ஒன்றுதான்"

"அவர்களுக்கு ஆசை இருக்கிறது"

"எனக்கு அது இல்லை"

*

"எனக்கோ வயதாகிவிட்டது. காடு வா என்கிறது. வீடு போ என்கிறது. இருக்கின்ற இந்தக் கொஞ்ச நாட்களுக்காவது நான் நல்லாய் இருந்துவிட்டுப் போகலாம் என்ற ஆசை என்னைப் பெரிதும் வாட்டுகிறது. அதிலும் என்னுடைய கடைசி காலம் அரசியல் வாழ்வோடு முடியவேண்டும் — அப்போதுதான் எனக்கு நல்ல செல்வாக்கும் புகழும் எதிர்காலத்தில் இருக்கும் என்பதை நான் நன்குக உணர்கிறேன். இந்த உணர்ச்சியால் உந்தப்பட்ட நான் எப்படி அரசியல் வாழ்வைத் துறக்க முடியும்? பலர் என்னைப் பதவியை விட்டுப் போ என்கிறார்கள். ராஜீநாமாச்செய்கிறாயா: இல்லையா என்று இடித்திடித்துக் கேட்கிறார்கள். இரத்தத்தோடு ஊறிய இந்த என் ஆசையை எப்படி என்னால் விட்டு விட முடியும்?"

இப்படிப் பேசியவர் ஒருவரா இருவரா என்ற சந்தேகம் எழ இடமிருக்காது — பேசியவர் ஒருவராய் இருக்க முடியாது — இருவர்தான் இவ்விதம் பேசியிருப்பர் — பேசியிருக்க முடியும் என்றுதான் எவரும் எண்ணுவர். ஆனால் இவ்விதம் பேசியவர் ஒருவரேதான் என்று நான் கூறினால் நீங்கள் ஆச்சரியத்தால் திக்குமுக்காடிப் போவீர்கள். அதற்கு நான் பொறுப்பாக முடியுமா என்ன! பேசியது என்னவோ ஒருவர்தான். தக்க ஆதாரத்தோடு கூறுகிறேன். இதுமட்டுமல்ல, இன்னும் இதுபோன்ற பலப்பல — ஒன்றுக்கொன்று முரண்பட்ட—வாதத்துக்கு நிற்க முடியாத—அறிவுக்குப் பொருந்தாத — அனுபவத்துக்கு ஒத்துவராத பல விஷயங்களை ஒரே ஆசாமி பேசியிருக்கிறார் — படித்துப் பாருங்கள்.

*

"முன்காலத்தில் சொக்காய் போடாமல் இருந்தவர்கள் எல்லோரும் இப்போது தையற்காரனைத் தேடி அளவுகொடுத்து; சட்டை, மேல் சட்டை முதலியன போட்டுக்கொள்கிறார்கள் — எவ்வளவு ஆசை!"

*

"நான் ஆதிகாலத்திலிருந்தே சொக்காய் போட்டுக்கொள்ளும் பரம்பரையில் வந்தவன். எனவே நான். சொக்காய் போட்டுக்கொள்கிறேன் என்றால், அது, எனக்கிருக்கும் ஆசையைக் காட்டுகிறதென்று யாராவது சொல்லமுடியுமா?— எனக்கு ஆசையே கிடையாது— அது என் பரம்பரைப் 'பழக்கம்"

*

"இந்தக் காலத்தில் பெண்களுக்குக்கூட இந்தப் பாழாய்ப்போன ஆசை அதிகமாகி இருக்கிறது— காலில் செருப்பும், கையில் நோட் புத்தகமுமாகத் தெருவில் அழகாகப் போகிறார்கள்"

*

"எனக்கு ஆசை அணுவளவும் இல்லை என்பதற்கு எத்தனையோ எடுத்துக்காட்டுகளை என் அரசியல் வாழ்க்கையிலிருந்தே எடுத்துக் காட்டமுடியும். சும்மா சாம்பிளுக்கு ஒன்றிரண்டை மட்டும் குறிப்பிடுகிறேன்."

"1938-ல் நான் சென்னை முதன் மந்திரியாக இருந்தேனல்லவா! அப்பொழுது ஒரு சம்பவம் நடைபெற்றது. அதாவது, ஒருவன், தான், எப்படிப்பட்ட பெரியவனாக இருந்தாலும், தன்னுடைய வேலையைத் தானே செய்யவேண்டுமென்ற சிறந்த பண்பை எல்லோரும் பெற வேண்டுமென்பதில் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டுள்ள நான்,

அடுத்த இதழ்

பொங்கல் மலர் 13—1—54ல் இங்கிருந்து அனுப்பப்படும். அதற்கிடையில் பொங்கல் மலர் வேலையை முன்னிட்டு, 10-1-54ல் வெளிவரவேண்டிய இதழ் நிறுத்தப்பட்டு, பொங்கல் விடுமுறைக்குப் பின் அடுத்த இதழ் 7—2—1954ல் வழக்கம்போல் வெளிவரும் என்பதை வாசகர்களுக்கும் ஏஜண்டுத் தோழர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறோம்.

மானேஜர்.

வழக்கம்போல் ஒரு நாள் காலையில் குளிப்பதற்காகக் குளிக்கும் அறைக்குச் சென்று, நான் கட்டியிருந்த துணியை நானே தோய்த்து உலரப் போட்டுக் குளித்து, வேறு துணி கட்டிக்கொண்டு சட்ட சபைக்குச் சென்றுவிட்டேன். அன்று மாலை, நான் சட்டசபையைவிட்டு வெளியே வந்தபோது வழக்கம்போல் அன்றைய தினசரிப் பத்திரிகைகளைப் பார்த்தேன். ஒரு பத்திரிகையில், நான் அன்று காலையில் துணி தோய்த்த போது எடுக்கப்பட்ட புகைப்படத்தின் 'பிளாக்' செய்யப்பட்டு வெளியிடப்பட்டிருந்தது. என்ன ஆச்சரியம்! எனக்கு ஒன்றுமே புரியவில்லை. யார் இந்தத் தகாத காரியத்தைச் செய்த சண்டாளர்கள் என்ற கோபம் எனக்கு. நானோ இந்த மாகாணத்து முதல் மந்திரி. நான் இருக்கும் பங்களாவோ நல்ல பாதுகாப்போடு உள்ளது. அதிலும், நாட்டவர் விரும்பாத இந்தி மொழியை நான் நுழைத்த காரணத்தால் எனக்குப் பெருத்த அளவில் எதிர்ப்பு இருந்தது. அதையொட்டி என்னுடைய பங்களா மேலும் நல்ல பாதுகாப்போடு வைக்கப்பட்டிருந்தது. அதுவும் போதாதென்று, என்னுடைய விளம்பர மந்திரி ஸ்ரீ இராமநாதன் அவர்கள் என்னுடைய பங்களாவுக்கு அடிக்கடி வந்து என்னைப்பற்றி யாரும் விளம்பரம் செய்யக்கூடாதென்பதைக் கவனித்து வந்தார். அதற்காக அவர் என்னுடைய பங்களாவில் சிறிது நேரம் தங்கியிருந்து அங்குள்ளவர்களுடன் உரையாடிவிட்டுப் பின்னர் சட்டசபைக்குப் போய்த் தம்முடைய விளம்பர இலாக்காவைக் கவனிப்பது வழக்கம். அப்படியிருந்தும் யாரோ ஒருவன் அவ்வளவு கட்டுக் காவலையும் மீறி என்னுடைய பங்களாவுக்குள் நுழைந்ததுமன்றி, நான் குளிக்கும் அறைப் பக்கமாக வந்து நான் துணிதோய்ப்பதைப் படம்பிடித்துப் பத்திரிகையில் போடும்படியும் செய்துவிட்டானே என்று நான் கூறினால் நீங்கள் நம்பவா போகிறீர்கள்! எனக்குத்தான் ஆசையோ விளம்பரப் பிரியமோ இல்லை யென்று சொல்லுகிறேன். நீங்கள் அதனை நம்பாமல், அந்த ஏற்பாட்டை நானேதான் செய்தேன் என்று சொன்னால் அதற்கு மேல் நான் என்ன சொல்ல முடியும்! இதை நீங்கள் நம்பவில்லையென்றால், எனக்கு ஆசையோ விளம்பரப் பிரியமோ துளியும் இல்லையென்பதற்கு எடுத்துக் காட்டாக இன்னொரு நிகழ்ச்சியை உங்கள் முன்னிலையில் வைக்கிறேன்”

*

“டில்லியில் நான் கவர்னர் ஜெனரலாக இருந்த சமயம், ஒரு நாள் நான் ஏர் உழுதுகொண்டிருந்ததை யாரோ படம் பிடித்துப் பத்திரிகையில் போடும்படி செய்துவிட்டார்கள். இப்படியெல்லாம் செய்வது எனக்குச் சர்வ சாதாரணம் என்பதை அறியாதவர்கள் என்னைப் பற்றித் தவறாக எண்ணிக்கொண்டு எனக்குப் பல கடிதங்களும் எழுதினார்கள்.”

*

“கவர்னர்ஜெனரல் ஏர் உழுவதாக விளம்பரம் செய்வது எள்ளிநகையாடக்கூடிய ஒன்றேயன்றி எவராலும் வரவேற்கக்கூடிய நல்ல என்றும்; முதல் மந்திரி துணி தோய்த்தார் என்று விளம்பரப்படுத்துவதிலாவது அர்த்தமுண்டு. ஆனால் ஒரு கவர்னர் ஜெனரல் ஏர் உழுதார் என்பதில் அர்த்தமோ அறிவுக்குப் பொருத்தமோ எதுவும் இல்லையென்றும்; அதிலும் ஏர் உழும் போது குதிக்கால் மறையுமளவுக்கு வேட்டி கட்டிக்கொள்வதும், காலில் செருப்புப் போட்டுக்கொள்வதும் அத்தொழிலையே பரிகாசச்செய்வது போலாகுமென்றும், இன்னும் பல விதமாகவும் எழுதப்பட்ட கடிதங்கள் எனக்கு வந்தன. என்றபோதிலும் ஏர் உழுத சம்பவத்தை நான் விளம்பரத்துக்காகச் செய்யவில்லை என்பதை நிச்சயமாகக்கூறுகிறேன். இதனை நீங்கள் நம்பவில்லையென்றால் அதற்கு நான் என்ன செய்யமுடியும்? எனக்கு ஆசையோ மோகமோ இல்லையென்பதற்கு இன்னொரு சம்பவத்தை எடுத்துக்காட்ட எனக்கு அனுமதி அளிக்கும்படி உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.”

*

“அதாவது, நான் இப்பொழுது முதல் மந்திரியாக இருக்கிறேன் அல்லவா! இது, எனக்கிருக்கும் ஆசையையோ அல்லது பதவி மோகத்தையோ காட்டுகிறதென்று உங்களால் கூறமுடியுமா? எனக்குப் பதவியில் ஆசையிருந்தால் தேர்தலில் நின்று வெற்றி பெற்று வந்திருக்கமாட்டேனா? அரசியல்வாழ்வை விட்டு எங்கோ ஒதுங்கிக் கிடந்த என்னை வலியப்பிடித்திழுத்துவந்து பதவியில் உட்கார வைத்துவிட்டு, இப்போது என்னைப் பதவி மோகம் பிடித்தவன் என்று கூறுகிறீர்களே! இது நியாயமா” என்று டபுள்பல்டியடித்துப் பேசிவந்த ஆச்சாரியார் இப்போது சில காலமாக ‘எனக்கு ஆசையும் பதவி மோகமும் ஆகிய இரண்டைத் தவிர வேறெதுவும் எனது இலட்சியமல்லவென்று” பேசி வருகிறார்.

தனது அரசியல் வாழ்வும் பதவியும் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதில் ஆச்சாரியாருக்கு ஏற்பட்டிருக்கும் ஆசைக்கோர் அளவில்லை.

எல்லோருக்கும் ஆசையும் பதவி மோகமும் இருக்கிறது — தனக்கு மட்டும் அவை கிடையாதென்று கிண்டல் செய்துவந்த ஆச்சாரியார், இப்போது, தம்முடைய பதவியை எப்படியாவது—எவர் காலைப்பிடித்தாவது காப்பாற்றித் தீரவேண்டுமென்ற ஒரே கவலையோடு செல்லுமிடமெல்லாம் “என்னைக் காப்பாற்றுங்கள்—என் பதவியை நிலைக்கச்

செய்யுங்கள்” என்ற அபயக்குரலை எழுப்பி வருகிறார்.

பிறரால் கூட்டப்படும் பொதுக் கூட்டங்களுக்கும் மாநாடுகளுக்கும் சென்று தம்மை ஆதரிக்கும்படி கேட்டுக்கொள்வதோடு, தாமாக வலியச் சென்று சில நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு தம்மைப் பாதுகாக்கும்படி பரிதாபத்தோடு கேட்டுக்கொண்டும், நிலைமை மிக மோசமாகி; வர வர எதிர்ப்பே வளர்ந்து மேலோங்குவதைக் காணும் ஆச்சாரியார் இப்போது தம்மைப் பாதுகாக்க ஒரு புது முறையைக் கையாள ஆரம்பித்திருக்கிறார்.

தம்முடைய பதவி எப்படியாவது, இன்னும் சில காலத்துக்காவது பாதுகாக்கப்படவேண்டுமென்பதில் பற்பல முறைகளைக் கையாண்டு தோல்வியே கண்ட ஆச்சாரியார், இப்போது, தம்முடைய தூண்டுகோலால் கூட்டங்கள், மாநாடுகள் நடத்தும்படி ஏற்பாடு செய்து, அவற்றின் வாயிலாகத் தமக்கு ஆதரவுதேட முற்பட்டிருக்கிறார். இந்த ஏற்பாட்டின்படி நடைபெற்ற நிகழ்ச்சிகளில் 27–12–53–ல் பூந்தமல்லியில் நடைபெற்ற பஞ்சாயத்தார்கள் மாநாடும் ஒன்று.

மேற்படி மாநாடு ஆச்சாரியாரின் தூண்டுதலின் பேரில் ஏற்பாடு செய்யப்பட்டதே என்பதை ஆச்சாரியாரே சூசகமாக ஒப்புக் கொண்டு பேசியும் இருக்கிறார்.

> “கஷ்டமான காலத்தில் ஒரு கிழவரைப் பார்த்து முதன் மந்திரியாக ஏற்படுத்தி, இதைப் பார்த்துக்கொள்ளுங்கள் என்று விட்டிருக்கிறீர்கள். ஆகவே அவருக்குத் தைரியம்சொல்லவேண்டி இப்படி ஏற்பாடு செய்வது பொருத்தமானதே”

என்று பூந்தமல்லியில் பஞ்சாயத்தார்கள் மாநாட்டைக் கூட்டியவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் முறையில் பேசியிருக்கிறார். இப்படியொரு மாநாட்டைக் கூட்டவேண்டுமென்று ஆச்சாரியாரே கேட்டுக் கொண்டார் என்பதனை மேலும் வலியுறுத்தும் முறையில்,

> “எனக்கு அதிக கஷ்டங்கள். எனவே தைரியம் சொல்ல இப்பேற்பட்ட கூட்டத்தைக் கூட்டியிருக்கிறீர்கள்”

என்றும் பேசியுள்ளார். பஞ்சாயத்தார்கள், தங்களுக்கிருக்கும் குறைகளை, நாட்டுக்கு முதல் மந்திரியாக இருப்பவரிடம் முறையிட்டுத் தீர்த்துக்கொள்வதற்காக, அந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தால், அந்த மாநாட்டை, ஆச்சாரியார், தம்மை ஆதரிக்கும் மாநாடாக ஆக்க முடிந்திருக்குமா? ஆச்சாரியார் தம்முடைய பிரசங்கத்தை ஆரம்பிக்கும்போதே, இந்தத் தகவலை வெளியிட்டிருக்கிறார். அதாவது “எனக்குத் தைரியம் கூற இது” “தைரியம் சொல்வது பொருத்தமானதே” என்ற முன்னுரைகளுடன் தம்முடைய பிரசங்கத்தை ஆரம்பித்து, அந்த மாநாடு கூட்டப்பட்டதன் நோக்கம் தமக்குத் தைரியம் கூறித் தம்மை ஆதரிப்பதற்கே என்பதைத் தெளிவாக விளக்கிவிட்டு, அதன் பின்னர்தான் பஞ்சாயத்தார்களைப்பற்றியும் இரண்டொன்று பேசியுள்ளார்.

தமக்கு ஆதரவு திரட்டும் பணியில் முற்பட்டிருக்கும் ஆச்சாரியார், தம்முடைய பிரசங்கத்தின் இடையிடையே தமக்குப் பதவியில் இருக்கவேண்டுமென்கின்ற ஆசை துளியும் இல்லை என்ற தோரணையில் பேசுவதன் வாயிலாகத் தம்முடைய பரிதாபகரமான நிலையை மக்கள் முன்னிலையில் கூறித் தம்மை எப்படியாவது ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளும் ஒரு புது முறையைக் கையாண்டு வருகிறார்.

> “பதவியைவிட்டுப் போகலாம் என்கிறார்கள் சிலர். போகக் கூடாதென்கிறார்கள் சிலர். எனக்குப் போகவேண்டுமென்றுதான் ஆசை. போகக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படவேண்டுமென்பதே கவலையாக இருக்கிறது”

என்று ஆச்சாரியார் கூறுகிறார். இவ்விதம் பேசுவதால், மக்களுக்கு அவர்மீது ஒரு தனிப் பச்சாதாபம் ஏற்படும் என்றும், அதன் காரணமாக இன்னும் சில காலத்துக்காவது பதவியில் ஒட்டிக்கொண்டிருக்கலாம் என்றும் அவர் கனவு காண்கிறார். அந்தக் கனவு அவருக்கிருக்கும் சிறிதளவு கண்ணியத்தையும் இழக்கச் செய்துவிடுகிறதென்பதைப் பாவம் அவரால் அறிந்து கொள்ள முடியாத அளவுக்குப் பதவி மோகம் அவரை ஆட்டிப் படைக்கிறது. பதவியைவிட்டுப் போகக் கூடிய சந்தர்ப்பம் ஏற்படுவதை எதிர்பார்த்துக்கொண்டு அதே கவலையாக இருப்பதாகக் கூறிக்கொள்ளும் ஆச்சாரியார், தானாக ஏற்பட்ட சந்தர்ப்பங்களையெல்லாம் எப்படியாவது சரிப்படுத்திச் சமாளித்துக்கொண்டு பதவியிலிருக்கப், படாதபாடுபட்டதை மக்கள் இதற்குள் மறந்திருப்பர் என்ற எண்ணம் ஆச்சாரியாருக்கு இருக்குமானால், நமக்குமட்டுமென்ன! இந்தப் பரிதாபத்தைக் காணும் எவருக்கும்தான், ஐயோ பாவம்! இப்படிப் பதவி ஆசை பிடித்த ஒரு மனுஷன் கொஞ்சக் காலத்துக்காவது இந்தப் பாழாய்ப்போன பதவியில் இருந்துவிட்டுப் போகட்டுமே என்றுதான் கூறத் தோன்றும். ஆனால், இந்தப் பதவி ஆசையை அவர் மறைக்கக் கையாளும் முறைகளைக் காணும்போதுதான், அவர் எதற்காகப் பதவியில் இருக்க ஆசைப்படுகிறார் என்பது தெளிவாகத் தெரிகிறது.

பொதுநல உணர்ச்சியோடு அவர் பதவியில் இருக்க ஆசைப்படவில்லையென்பதும், அவருக்கிருக்கும் அபரிமிதமான சுயநலமே

மந்தைகள் வேண்டாம்

“காங்கிரசில் எவ்வளவு பேர் இருக்கின்றனர் என்ற எண்ணிக்கை, பெரிதல்ல. தரம்தான்பிரதானம். முதல்தரமான ஆட்கள் இருப்பதையே நான் விரும்புகிறேன். ஐக்கியத்தைச் சீர்குலைக்கும் ‘மந்தைகள்’ நமக்கு வேண்டாம்”

ஜவகர்லால் நேரு

புதுடில்லி

28–12–53

அவரைப் பதவியிலிருக்கும்படி தூண்டிக்கொண்டிருக்கிறதென்பதும் நன்றாகத் தெரிகிறது.

பதவியைவிட்டுப்போகும் சந்தர்ப்பம் ஏற்படுவதை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாகக் கூறும் ஆச்சாரியார்,

> "இந்த நிலைமையில் என்னை இங்கு வரும்படி அழைத்தீர்கள். வண்டி ஏறிவந்த அதிர்ச்சியில் கவலை மறந்துபோய் இருக்கிறது. மனத்திற்கு ஓய்வு ஏற்பட்டிருக்கிறது"

என்று ஏன் பேசவேண்டும்? ஆச்சாரியாரை அந்த மாநாட்டினர் அழைத்ததற்குக் காரணமே அவருக்குத் தைரியம் கூறத்தான் என்பதை அவரே ஒப்புக்கொண்டு பேசிவிட்டு, உடனே "நான் பதவியைவிட்டுப் போகும் சந்தர்ப்பம் ஏற்படுவதை எதிர்பார்த்துக் கொண்டு அதே கவலையாக இருக்கிறேன்" என்று கூறினால், எப்படிப்பட்ட அறிவுச் சூனியனும் அவருடைய உள் எண்ணம் எது என்பதை யோசனைக்கு இடமின்றி ஒரு நொடியில் அறிந்துவிடுவானே என்பதனைக்கூட அறியத் தடைசெய்யும் அளவுக்கு அவருக்கு அதிகார ஆசை தலைதூக்கி நிற்கிறதென்பதைத் தவிர இதற்கு வேறென்ன கூறமுடியும்!

வண்டி ஏறிவந்த அதிர்ச்சியில் அவருக்கிருந்த கவலை எல்லாம் மறந்துபோய்விட்டதென்றும், மனத்திற்கு ஓய்வு ஏற்பட்டிருக்கிறதென்றும் ஆச்சாரியார் ஒருகுட்டிக் காமிக் அடித்திருக்கிறார்.

எங்கிருந்து எங்கு வண்டி ஏறி வந்தார் தெரியுமோ?

சென்னையில் இருந்து பூந்தமல்லிக்கு.

சென்னைக்கும் பூந்தமல்லிக்கும் இடையே எத்தனை மைல் தெரியுமோ?

எண்ணிப் பதிநான்கு மைல்.

பாவம்! கட கடா கட கடாவென்ற சத்தத்தோடு கட்டை — அதிலும் டாப் இல்லாத மொட்டை வண்டியில் ஒருவர் ஏறிச்சென்றால் அதிர்ச்சி ஏற்படத்தானே செய்யும் என்று தான் எவருக்கும் எண்ணத் தோன்றும். ஆனால், ஆச்சாரியார்—மாகாணத்து முதல் மந்திரி! மாட்டு வண்டியிலா வந்திருப்பார்? இருக்காதே! ரயிலில் அல்லது காரில் அல்லது பிளேனில்தான் வந்திருப்பார் —வந்திருக்க முடியும் என்ற எண்ணம் உடனே தோன்றி முன்கூறிய அபிப்பிராயத்தை அடிபடச்செய்து விடும். சென்னைக்கும் பூந்தமல்லிக்கும் இடையே ரயில்பாதையோ பிளேன் போக்குவரத்தோ இல்லாத காரணத்தால், ஆச்சாரியார் காரில் தான்—சர்க்கார் காரில்தான்—முன் பாரா பின்பாராவோடு ஆடாமல் அசையாமல் வந்திருப்பார் — அதிலும் 14 கல் தொலைவைக் கார்மூலம் கடப்பவருக்குக் களைப்போ அதிர்ச்சியோ ஒருபோதும் ஏற்படாதென்ற எண்ணம் எவருக்குத்தான் தோன்றாமல் இருக்கமுடியும்? என்றாலும் கூறுகிறார் ஆச்சாரியார் தனக்கு வண்டி ஏறிவந்த அதிர்ச்சியில்கவலை எல்லாம் மறந்து மனதிற்கு ஓய்வு ஏற்பட்டிருப்பதாக.

சென்னையில் இருந்து பூந்தமல்லிக்கு இடையே உள்ள ரோட்டு சாதாரண மண்ரோட்டா? இல்லை.

கரடுமுரடான கல் ரோட்டா? இல்லை.

தார் ரோட்டா? இல்லை.

ஆங்கிலேயன் மேற்பார்வையில் போடப்பட்ட அசல் காங்கிரீட் ரோட்டாச்சே அது! அப்படிப்பட்ட ரோட்டில் கட்டைவண்டியில்அல்ல, இன்னும் அதைவிட மோசமான வண்டி ஏதாவதிருந்து அதில் ஏறி வந்தால்கூடக் களைப்புக் கடுகளவும் ஏற்படாதே! ஆனால், அதிகாரபீடத்தில் இருக்கும் ஆச்சாரியார் அரசாங்கக் காரில் ஆடாமல் அசையாமல் வந்தும் அதிர்ச்சி ஏற்பட்டதாகவும், அந்த அதிர்ச்சி அவருக்கிருக்கும் கவலையையே மறக்கும்படி செய்து மனத்திற்கு ஓய்வு ஏற்படுத்தியதாகவும் கூறுகிறார். உடம்பை அந்த அளவுக்கு உலுக்கி மெய் மறக்கச் செய்துவிட்டதாம் அந்தப் பிரயாணம்.

மந்திரி வாயில் இருந்துவரும் சொற்கள் எல்லாம் 'மந்திரம்' என்று மக்கள் கருதி நம்பிவிடுவார்கள் என்ற எண்ணம்போலும் அவருக்கு! இல்லையேல், இவ்வளவு தைரியமாக 14 கல் தொலைவுக்குக் காரிலேயே வரவேண்டியிருந்ததால் களைப்பும் அதிர்ச்சியும்ஏற்பட்டுவிட்டதென்று கூறியிருப்பாரா? எதைச் சொன்னாலும் மக்கள் கேட்டுச் சகித்துக் கொண்டிருப்பர் என்ற நினைப்பைத் தவிர இப்படியெல்லாம் பொருந்தாப் புளுகுகளைப் பேசுவதற்கு வேறு காரணம் ஏதாவது இருக்க முடியுமா?

*

பதவியை விட்டுப் போவதற்குச் சந்தர்ப்பம் ஏற்படவில்லையாம் — கூறுகிறார் ஆச்சாரியார் கூச்சமின்றி!

ஒன்றிரண்டா? எத்தனையோ சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன—ஏற்படுத்தப்பட்டன. ஒன்றுக்கும் அசைந்து கொடுக்கவில்லையே.

ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு நொண்டிச் சமாதானம் கூறிக் கொண்டு, ஆட்சிப் பீடத்தை, குரங்குப் பிடித்ததெல்லாம் இரும்பு—கடித்ததெல்லாம் கரும்பு என்பது போல், விடாப்பிடியாய்ப் பிடித்துக் கொண்டிருப்பதுமன்றி "எனக்குப் பதவியில் ஆசையே கிடையாது—விட்டுவிட்டுப் போகலாமென்றாலோ "வேண்டாம் இந்த 'விபரீதம்'—நீங்கள் போய்விட்டால் சென்னைமாகாணமே இருண்டுபோய்விடும் என்று கூறுகிறார்கள்—அதற்காக யோசிக்கிறேன்" என்று வேறு பேசிக் கொண்டு திரிவதைப் பார்க்கும் போதுதான், பதவி போய்விட்டால் என்ன செய்வது என்ற ஏக்கத்தால் ஆச்சாரியாரின் முகம் அசடுவழிந்து காட்சியளிப்பது நமது மனக் கண் முன் தோன்றுகிறது.

ஆச்சாரியார் பதவியிலிருந்து விலகுவதற்கு ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் இரண்டொன்றைமட்டும் இங்கு குறிப்பிடுகிறேன்.

1. புதிய கல்வித் திட்டம்
2. காமராஜரின் கணை
3. காங்கிரஸ் எம்.எல்.ஏ க்களின் காரசாரமான எதிர்ப்பு.

இவை மூன்றும், ஆச்சாரியார் பதவியிலிருந்து விலகுவதற்கு ஏற்பட்ட முக்கியமான சந்தர்ப்பங்கள். இந்த மூன்று சந்தர்ப்பங்களிலும், ஆச்சாரியார் தம்முடைய பதவியைக் காப்பாற்ற என்னென்ன

(13-ம் பக்கம் பார்க்க)

பழுப்புத் தங்கம்!

[ப. வாணன்]

"ஐந்தாண்டுத் திட்டத்தால், திராவிடம் அடையும்பலன் என்ன?

நாம் வாழும் பகுதிகளில் இது வரை எந்தத் திட்டம் அமுலில் இருந்துவருகிறது?

பாரத்வர்ஷம் சுதந்திரம் அடைந்த பின், நமது நாட்டில் உண்டான தொழிற்சாலைகள் எவை யெவை? உற்பத்தி செய்யப்பட்ட சாமான்கள் எவ்வளவு?

வெட்டப்பட்ட ஆறுகளின் தொகை என்ன?

தோண்டப்பட்ட சுரங்கங்களின் எண்ணிக்கை என்ன? அதனால் அடைந்த லாபம் எவ்வளவு?"

இப்படியெல்லாம், பத்திரிகைகளிலும், சர்க்கார் அறிக்கைகளிலும் தேடிக் கண்டுபிடிக்க முடியாமல் அலுத்துப்போனது, நாம் மட்டுமல்ல; நம்மைப்போலவே நமது அரசாங்கப் பிரதிநிதிகளும் தேடி அலுத்துப் போயினர். முடிவில் சென்ற வாரம் சட்டசபை கூடிய போது, அமைச்சர் ஆச்சாரியாரையே கேட்டனர். அதற்கு ஆச்சாரியார், சாவதானமாக, "ஆந்திரம் பிரிந்தபின் சென்னைக்கும் ஆந்திரத்திற்கும், மைசூருக்கும் மூன்று பகுதிகளாக திட்டத்தைப் பிரித்து வருகிறோம்!" என்று கூறியிருக்கிறார்.

ஐந்தாண்டுத் திட்டத்தின் அரைப் பாகத்தைக் கடந்துவிட்டோம் என்று கூறி, அடுத்த ஐந்து வருடத் திட்டத்தைத் தயார் செய்துகொண்டிருக்கிறது, நேரு சர்க்கார்.

ஆனால், இந்த ராஜ்யத்திலே ஐந்தாண்டுத் திட்டத்தை, ஆளுக்குக் கொஞ்சமாகப் பிரிக்கும் வேலையே இன்னும் தீரவில்லை.

அப்படிப் பிரித்தபின்னும் அதிகமான அளவுக்கு அபிவிருத்திக்கான திட்டங்கள் போட பணவசதி கிடைப்பதற்கான அறிகுறிகளைக் காணமுடியவில்லை. பிரிக்கப்பட்ட சென்னை ராஜ்யத்திற்கு, சுமார் எண்பது கோடி ரூபாய்கள் வரைதான் கிடைக்குமென்று அறிவிக்கப்படுகிறது. இவ்வளவு கொஞ்ச பணத்தை வைத்துக்கொண்டு எந்த பெரிய தொழிற்சாலையையும் கட்ட ஆரம்பித்தால், அது அரைகுறையாக நிறுத்தப்படவேண்டியதாகும். அதிக பணம் தேட டில்லி சர்க்காரின் தயவு தேவை, சென்னை சர்க்காருக்கு. சென்னை, பாரத்வர்ஷத்தின் ஒரு அங்கமாக இருப்பதால், அது வடக்கே இருந்து கொடுக்கப்படும் சிறு தொகையையும் பெருந்தொகையாக நினைத்து மகிழவேண்டிய நிலையில் இருக்கிறது.

இந்தப் பொருளாதார அடிமைத்தனத்தை வெளியில் கூற தைரியமில்லாத ஆச்சாரியார், அடுத்தபடியாக சென்னை மேல்சபையில் பேசும்பொழுது "நமது ராஜ்யத்தில் பெரும் நீர்த்தேக்கங்கள் கட்டுவதை விட்டுவிட்டு, நாம் சிறு அணைக்கட்டுகள் கட்டுவதில் நம்கவனத்தைத் திருப்பவேண்டும்" என்று யதார்த்தவாதியாகக் கூறுவதுபோல் கூறியிருக்கிறார்.

சுதந்திரம் வந்தால், வானத்திலிருந்து வசதிகளை வாரிக் கொட்டுவதாகப் பேசிவந்த தேசீயத் தோழர்கள், 1947ற்குப் பிறகு, இந்திய உபகண்டததில் ஏற்பட்ட மாறுதல்களையும், அதில் திராவிடம் அடைந்த மாற்றத்தையும் சிறிது நேரம் சிந்திக்கவேண்டுகிறோம்.

வடநாட்டிலே, வங்கத்திலே கட்டப்பெற்ற இரயில்வே என்ஜின் தொழிற்சாலையும், பீஹாரிலே கட்டப்பெற்ற சிந்திரி எருத் தொழிற்சாலையும் மாத்திரமே, ஆச்சாரியார் கூறும் சென்னையின் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு சமமானது. இந்த இரண்டும் உதாரணத்திற்குத்தான். இவையன்னியில் வங்கம் — பீஹார் இரண்டு ராஜ்யங்களுக்கும் சேர்ந்து ஆரம்பிக்கப்பட்டு, இப்பொழுது பாதி வழி கடந்துவிட்ட தாமோதர் பள்ளத்தாக்கு நீர்த் தேக்கத் திட்டம்; பஞ்சாபில் பக்ரா-நாங்கல் திட்டம்; மத்திய இந்தியாவில் ஹிராகுட் திட்டம்; இன்னும் பல அணைக்கட்டுகளும் மொத்தமாக சுமார் முந்நூறுகோடி ரூபாய்களில் திட்டமிட்டு நடத்தப்பட்டு வருகின்றன. இவைகளை அன்னியில் வடநாட்டிலே ஆரம்பிக்கப்பட்ட 12 விஞ்ஞான ஆய்வுச் சாலைகள்; பென்ஸிலின், டி-டி-டி முதலிய மருந்து தயாரிக்கும் சாலைகள், இப்படி எழுதிக்கொண்டேபோனால் பக்கம் கொள்ளாது.

இப்படி வடக்கு உயர்ந்துகொண்டிருக்கும்பொழுது, தெற்கில் வெள்ளைக்கார அட்வைஸரி அரசாங்கம் ஆரம்பித்து வைத்துவிட்டுப்போன மலம்புழா, பவானி நீர்த் தேக்கங்களைத் தவிர, இந்த சுயராஜ்ஜிய சர்க்கார் செய்துகொண்டுவரும் திட்டம் என்ன என்று கொஞ்சம் சிந்திக்க வேண்டும், தேசியத் தோழர்கள்.

"வடநாடு - தென்னாடு என்று பேசுவது தவறு" என்று நேர்மைக்கும் நியாயத்திற்கும் ஒவ்வாத வாதத்தைக் கூறுவதைத் தவிர, இந்த நிலைக்கு வேறெந்த சரியான காரணத்தையாவது காட்ட முடியுமா, தேசீயத் தோழர்கள்.

ஆச்சாரியாரும் அவர் சகாக்களும் 'திட்டங்கள்' என்றாலே, ஆறு வெட்டுவதும் குளம் வெட்டுவதும் தான் என்ற ரீதியில் இந்தத்தடவை கூடிய சட்டசபையிலே பேசியிருக்கின்றனர்.

தூங்கியவன் தொடையிலே கயிறு திரிக்கும் கயவனைப்போல, வடநாட்டின் தலைமைக்கு அடிபணிவதுதான் நாட்டுப்பற்று என்று எண்ணிக்கொண்டிருக்கும் காங்கிரஸ் தலைவர்கள் சென்னையிலே இருக்கும் காரணத்தினால்தான்,

துணிவோடு நம் நாட்டு வரிப்பணத்தின் பெரும்பகுதியை வாங்கிக்கொண்டுபோய் வடநாட்டிலே தொழிற்சாலைகள் கட்டுகின்றனர், நம்மை ஆளவந்த நேரு சர்க்கார்.

இங்கே ஒரு ஆலை கட்டக்கூட திட்டம் போடவில்லை. இதை எடுத்துக் கூறினால், தேசியத் தோழர்களுக்குக் கோபம் வருகிறதே தவிர சென்னை மாகாணத்திலும் இரண்டொரு தொழிற்சாலை கட்டுவதுதானே, என்று நேருவைப் போய் கேட்க பயப்படுகிறார்கள். இங்கே வந்து, சிறு சிறு அணைக்கட்டுகள் கட்டலாம் என்று ஆருடங்களாகப் பேசி வருகின்றனர்.

அணைக்கட்டுகள் கட்டுவதையும், ஆற்றுக்குப் பாலம் போடுவதையும் தான் கரிகால் சோழன் காலத்திலிருந்து இந்த நாட்டிலே செய்து வருகிறோமே! இந்த வேலை செய்வதற்கு ஆண்டுதோறும் பணத்தை வாரிக் கொடுத்து வடநாட்டாரிடம் அடிமைப்படுவது ஏன்?

நவீன காலத்திலே, நாட்டின் நலங்குறித்துப் போடப்படும் திட்டங்கள், வெறும் நீர்த்தேக்கங்கள் மாத்திரமல்ல. அணைக்கட்டுகள் அதிகமானால் சோறு கிடைக்கும். அது அடிப்படைப் பிரச்னையைத் தீர்க்கும். அந்த அஸ்திவாரம் அமைத்தபின் வாழ்க்கைக்குத் தேவையான சாமான்களையும், மருந்து வகைகளையும் உற்பத்தி செய்யும் ஆலைகளை நிறுவவேண்டும்.

மனிதனுக்குத் தேவையான ஆடையையும், அவனிருக்குமிடம் அமைய அவசியமான பொருள்களையும், பெரும் ஆலைகள்தான் உற்பத்தி செய்யமுடியும். இன்றைக்கு நாம் வளர்ந்திருக்கும் நிலையில், பேனா, பென்சில் முதலியவைகளிலிருந்து காலில் போட்டுக்கொள்ளும் பாதரட்சைவரை எல்லாப் பொருள்களையும் பெரும் தொழிற்சாலைகள்தான நமக்கு உற்பத்தி செய்து கொடுத்தாகவேண்டும்.

இந்த நிலையை நன்கு உணர்ந்துகொண்ட காரணத்தால்தான், வடநாட்டிலே பெரும் நீர்த்தேக்க திட்டங்களோடு, பெரும் பெரும் ஆலைகளையும் நிறுவி வருகின்றனர், நேரு சர்க்கார். உள்நாட்டிலே பணம் இல்லாவிட்டாலும், அமெரிக்க, ஆங்கிலோ வல்லரசுகளிடம் கடனையும், உதவி என்ற பெயரால் பொருளாதார ஒப்பந்தங்களையும் செய்து கொண்டு வருகின்றனர்.

இப்படிப்பட்ட ஒப்பந்தம் ஒன்று டில்லியில் இம்மாதம் 22-ம் தேதி நடந்திருக்கிறது.

ஹிட்லரின் நாஜீச ஜெர்மனியில் பெரும் முதலாளிகளான குருப்ஸ்-டெமக் என்ற ஆலை முதலாளிகளிடம் ஒப்பந்தம் ஒன்று செய்திருக்கிறது, இந்திய சர்க்கார். குருப்ஸ்-டெமக் முதலாளிகளின் தலைவரான குருப்ஸ் சண்டை முடிந்தவுடன் கைது செய்யப்பட்டு 12 ஆண்டுகள் தண்டனை விதிக்கப்பட்ட கூட்டு முதலாளி. பின்னால், சர்வ தேசிய அரங்கத்தில் ஏற்பட்ட மாறுதல்களினால், பாதி சிறை தண்டனை அனுபவிக்கும் முன்னமேயே விடுவிக்கப்பட்டு, அவருடைய சொத்துக்களில் பெரும்பகுதியை ரஷ்யாவும் பிரான்சும் யுத்த நஷ்ட ஈடுகளாக எடுத்துக்கொண்டு, மீதி சுமார் நூறு கோடி பெறுமான சொத்தைக் கொடுத்தனர். விடுதலையான ஓரிரு ஆண்டுகளிலே பழைய படி இரும்பாலைகளையும், நிலக்கரிச் சுரங்கத் தொழிலையும் ஆரம்பித்து, பிரான்ஸ், ஜெர்மனி, ஆஸ்டிரியா, ஸ்விட்ஸர்லாந்து, லக்ஸம்பர்க்—இப்படி மத்திய ஐரோப்பா பூராவும் தன்னுடைய தொழிற்சாலைகளை நிறுவி, மேல்நாட்டு முதலாளிகளில் முதல் வரிசையில் நிற்கும், ஜெர்மானியர், குருப்ஸ்.

குருப்ஸ்—டெமக் கம்பெனியாருக்கு ஐம்பது உலோகம் உருக்கும் ஆலைகளும், நூறு எஃகு ஆலைகளும், ஆயிரம் இரும்பு ஆலைகளும் இருக்கின்றன.

இப்பேர்ப்பட்ட வறுத்த முதலாளியோடு இந்திய உபகண்டத்தில் நூறுகோடி ரூபாயில் ஒரு எஃகு ஆலையை நிறுவுவது என்ற ஒப்பந்தத்தை செய்துகொண்டிருக்கிறது இந்திய சர்க்கார்.

இன்னும் நான்காண்டுகளில் 5-லட்சம் டன் எஃகு உற்பத்தி செய்யக் கூடிய 'இந்துஸ்தான் எஃகுத் தொழிற்சாலை''யை நிறுவி அதை மேற்பார்வை பார்க்கும் பொறுப்பு பூராவும் குருப்ஸ் கம்பெனியார் ஏற்றுக்கொண்டுள்ளனர். அவர்களுடைய என்ஜினியர்களின் உழைப்பிற்கு அவர்கள் கேட்கும் ஊதியம் அளிப்பதோடு, நூறுகோடி ரூபாய் மூலதனத்தில் இருபது கோடி ரூபாய்களை குருப்ஸ் கம்பெனியார் போட இந்திய சர்க்கார் ஒத்துக்கொண்டுள்ளனர். மூலதனத்திலே ஐந்தில் ஒரு பங்கை போடுவதின் மூலம், வருங்காலத்தில் லாபத்தில் ஐந்திலொருபங்கை பெறத் தகுதியுடையவர்கள், குருப்ஸ் முதலாளிகள்.

தனிப்பட்ட முதலாளிகளை சேர்த்துக்கொண்டு இவ்வளவு பிரமாண்டமான எஃகுத் தொழிற்சாலையை ஆரம்பிக்கின்றனரே நேரு சர்க்கார் என்று சிந்திக்கத் தேவையில்லை. முற்போக்கான பாதையில் பொருளாதார திட்டங்களை நிறைவேற்றும் வழியில் நேரு சர்க்கார் இதுவரை செல்லவில்லை. ஆகவே இந்த ஒப்பந்தத்திலும் அந்த அடிப்படை தவறுகளை அதிகமாக விளக்கத் தேவையில்லை.

ஏதோ வெள்ளையன் கொடுத்துப் போன அதிகாரம் அவர்கள் கையில் மாட்டிக்கொண்டு திண்டாடுகிறது.

''இந்துஸ்தான் எஃகு ஆலை''யை எந்த இடத்திலே நிறுவுவது என்பதை இன்னும் முடிவுசெய்யவில்லையாம் அநேகமாக பீஹாரிலோ, ஒரிஸ்ஸாவிலோ மத்திய மாகாணத்திலோ இருக்குமாம்.

எண்பது கோடி ரூபாயில் சென்னைக்கு ஐந்தாண்டு திட்டம் இன்னும் தயாராகவில்லை.

ஆனால் வடநாட்டிலே 100-கோடி ரூபாயில் எஃகு ஆலை ஆரம்பிக்கப்படுகிறது!

திராவிடம் செல்வத்திலே கொழிக்கிறதா! ஒருவேளை வடநாடு பஞ்சமாக இருக்கிறது என்று, அங்கு ஆரம்பிக்கிறார்களா?

அப்படிப்பட்ட எண்ணம் தோன்றக் கூடிய அளவில் நாடு இல்லையே. பீஹாரில் இன்றைக்கு இல்லாத தொழிற்சாலையே கிடையாது.

இரும்பு, நிலக்கரி, மாங்கனீஸ் முதலிய எல்லா உலோகங்களுக்கும் தொழிற்சாலை இருக்கிறது.

புகையிலை, கரும்பு முதலிய பணம் தரக்கூடிய பயிர்கள் முதன்மையான அளவில் வளர்கிறது.

உலகத்திலேயே அதிகமான மைகாவை தருகிறது பீஹார்.

இப்படி செல்வம் கொழிக்கும் பீஹாரிலும், அதற்கிணையாக வளர்ந்துள்ள வங்கத்திலும் மற்ற வடபகுதிகளிலும் எங்காவது ஓரிடத்தில் இந்த "இந்துஸ்தான் எஃகு ஆலை"யை நிறுவ திட்டம் போட்டு வேலை செய்கின்றனர் நேருசர்க்கார்.

பலவிதமான ஆலைகளையும், நீர்த்தேக்கங்களையும் கட்டுவதால், வடநாட்டில் செல்வம் வளருவதோடு வேலையில்லா திண்டாட்டம் ஒழிகிறது. ஆலைகள் வளரும்போது மக்களுக்கு எங்குபார்த்தாலும் வேலையும், வாழ்க்கை வசதியும் கிடைக்கின்றன.

இப்பேர்ப்பட்ட லாபங்களை எண்ணிப்பார்க்கும் இந்திய உபகண்டத்தை ஆளும் வடவர்கள் தங்கள் பிராந்தியங்களிலேயே அபிவிருத்தித் திட்டங்களை நிறுவிக்கொண்டு வருகின்றனர். இதற்கு திராவிடர்களுக்கு விசித்திரமான சமாதானங்களைக் கூறுகின்றனர்.

"நிலக்கரி இருக்குமிடத்தில்தான் எஃகு ஆலை"யை நிறுவ இயலும்.

பக்கத்திலே மலிவான மின்சார சக்தி தேவை

பூமிக்கடியிலே இருக்கும் இரும்பு தாதுக்கள் அதிக ஆழத்திலே இருக்கக்கூடாது!

இப்படி வடநாட்டில் இந்த இரும்பாலையை ஆரம்பிக்க எவையெவை தேவையானவையோ அந்த வாதங்களைக் கூறுகின்றனர்.

ஒரு நாட்டின் அபிவிருத்தித் திட்டமே, அந்த நாட்டில் இருக்கும் கனிசப்பொருள்களை ஆராய்ந்து அவைகளைத் தோண்டி எடுக்கப்படும் முயற்சியேதானே?

அந்த விஷயத்தில் அக்கரையில்லாமல், எங்கெல்லாம் உலோக ஆலைகள் நடந்துகொண்டிருக்கிறதோ, அங்கேயே மற்றொன்றையும் ஆரம்பித்துவிட்டால் என்ன அர்த்தம்?

அப்படி நிலக்கரியும், மின்சாரமும் மலிவாகக் கிடைக்கும் இடத்திலேதான் எஃகு ஆலை ஆரம்பிக்க வேண்டுமென்றால், பேசாமல் இந்த எண்பது கோடி ரூபாய்களை அமெரிக்காவிடமோ, லக்ஸம்பர்க்கிடமோ கொடுத்து நேருவின் பெயரால் ஒரு எஃகு ஆலையை ஆரம்பிக்கச் சொன்னால் நாளைக்கே ஆரம்பித்துவிடுவார்கள். வட இந்தியாவைவிட அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் நிலக்கரியும் மின்சாரமும் பலமடங்கு மலிவு!

இதை விட்டுவிட்டு நேருசர்க்கார் இந்தியாவில் ஏன் எஃகுத் தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டும்?

நமக்கென்று ஒன்று இருக்க வேண்டும்; நாம் வளமாக வேண்டும் நம் நாட்டிலே செல்வம் வளரவேண்டும் என்ற தேசீய எண்ணம்தானே அதற்குக் காரணம்.

அந்தக் காரணம் நமக்கும் வருவதிலே தவறு எதுவுமிருக்க முடியாது.

அமெரிக்காவைவிட அதிகமான விலை கொடுத்து நிலக்கரியையும், மின்சாரத்தையும் பெற்று பீஹாரிலே இரும்பாலை நிறுவும்போது, அதைவிட கொஞ்சம் அதிகமான சிரமத்தோடு திராவிடத்திலே ஏன் அதை ஆரம்பிக்கக்கூடாது?

சிரமம் என்று நாம் கூறும்போது தொழில் வளத்தில் பிற்போக்கில் தள்ளப்பட்டுள்ள திராவிடத்தில் எந்த ஆலையை ஆரம்பித்தாலும் ஆரம்பத்தில் லாபம் குறைவாகத் தானிருக்கும். ஆனால் ஒரு பக்கத்தில் இரும்பாலையையும், மற்றொரு பக்கத்தில் நிலக்கரிச் சுரங்கத்தையும், கூடவே மின்சார உற்பத்திக்கான திட்டங்களையும் போட்டுக்கொண்டு போனால், நிச்சயம் திராவிடத்திலும் எல்லா ஆலைகளும் லாபகரமாக நடக்க ஆரம்பித்துவிடும். திராவிடத்தின் வளர்ச்சியிலே அக்கரைகொண்டவர்கள் கவனித்து, திட்டம் தீட்டி செய்ய வேண்டிய காரியம் இது.

இரும்பு தாதுப் பொருளையும், நிலக்கரியையும் திராவிடத்தில் தேடினால் கிடைக்காமல் போகாது.

இன்னும் நன்கு கவனித்தால் வடநாட்டைவிட வசதியான முறையில் உலோகத் தொழிற்சாலைகளை இங்கு ஆரம்பிக்கலாம். இதை நாம் மாத்திரம் கூறவில்லை. இதோ டில்லி சர்க்காரின் ஸ்டீம் பாய்லர்களின் மேற்பார்வையாளர் எஸ். என். மகாலிங்கம் என்பவர் கூறுகிறார், கேளுங்கள்.

"இந்தியாவில் கிடைத்துவரும் நிலக்கரி நீண்டகாலத்திற்கு வராது என்பதோடு, இங்குகிடைக்கும் மண்ணெண்ணெய்களும் குறைந்த அளவில்தான் இருக்கும். ஆகவே வட இந்திய நிலக்கரி சுரங்கங்களுக்கு வெகு தொலைவிலிருக்கும் தென்னிந்தியா, அதனுடைய பழுப்புத் தங்கமான "லிக்னைட்" என்ற நிலக்கரி பக்கம் கவனத்தைச் செலுத்தவேண்டும்.

கடலூரில் ஆரம்பித்து கிழக்கே பாண்டிச்சேரி வரையிலும் தெற்கே தூத்துக்குடி வரையிலும் லிக்னைட் பூமிக்கடியில் புதைந்து கிடக்கிறது. இவைகளைத் தோண்டி எடுத்தால் மின்சார வசதி பெறும் தெர்மல் ஸ்டேஷன்களை நாம் உண்டாக்கிக் கொள்ளலாம். இன்றைக்கு உலகத்திலே தெர்மல் ஸ்டேஷன்கள் மூலம் தான் 75 பாகம் மின்சக்தியைபெறுகின்றன. ஆகவே நாமும் மழையை

(10-ம் பக்கம் பார்க்க)

3—1—54-ல்
பொதுச் செயலாளர் வேலூர் வருகை

காலை 8-45—9 வாலாஜா காந்தி மிஷன் அனுதை ஆஸ்ரமம் பார்வையிடுவார்.

9—10 வேலூர் நகரசபை வரவேற்பு

11—12 ஊழியர்கள் கூட்டம்-வேலூர் டவுன் ஹாலில்

மாலை 4 மகாத்மா காந்தி சிலை திறப்பு விழா

மாலை 5—9 வ. ஆ. மா. தி. மு. க. வரவேற்பு கூட்டத்திலும் நிதி அளிப்பு விழாவிலும் கலந்து கொள்வார்.

ஏ. எம். சி. கிருட்டிணசாமி
தி. மு. க. மாவட்டச் செயலாளர்

வாழ்த்தும் வணக்கமும்

தாயகத்தின் விடுதலைக்காக, மழலையின் மொழியையும் மனைவியின் காதலையும் மறந்து, பெற்றோரிடம் விடைபெற்ற வண்ணம், அறப்போரில் ஈடுபட்டு, ஆளவந்தாரின் வெறியாட்டத்துக்கு இரையாகி, சிறைச்சாலைக்குள்ளே கிடக்கும், தாயகத்தின் கண்மணிகளாம் நம்முடைய சகோதரர்களுக்கு, நம்முடைய வாழ்த்துதல்களையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். வாழ்க, வீரர்கள்! ஒழிக அடக்குமுறை!!

திராவிடநாடு

காஞ்சி] 3—1—54 [ஞாயிறு

புயலுக்குப் பின்!

★

புயலுக்குப்பின், அமைதி என்பார்கள். நாட்டிலோ, அமைதி ஏற்படாததுமட்டுமல்ல—பெரும்புயல், தொடர்ந்து வீசியபடியே இருக்கிறது.

ஓடிப்போன 1953-ம் ஆண்டு அரும்பிய நேரத்தில், திராவிடத்தின் கரையோரங்களைத் தாக்கிச் சென்றதே, அந்தப் புயலையல்ல—நாம் குறிப்பிடுவது; ஆட்சிப் புயலை.

இயற்கைப் புயல் தாக்கி, நாட்டோரின் கண்களையெல்லாம் குளமாக்கிச் சென்றபோது, நாம் முன்வந்தோம்—நிதி திரட்டினோம்—தந்தோம். அதேபோல கடந்த ஆண்டில், வறுமைப் புயல் வாட்டியதால் பிணக் குழிகளைத் தேடிக்கொண்டிருந்த கைத்தறியாளரின் கண்ணீர்ப் புயலை அடக்கவும், நாடெங்கும் கைத்தறித்துணிகளைத் தூக்கி, விற்றோம் — விலைபோகச் செய்தோம்.

மக்கள் மன்றத்தின் புயலை அடக்கி, அமைதி ஏற்பட பாடுபட்ட நம்மை, அதிகாரப் புயல், தொடர்ந்து, தொடர்ந்து தாக்குகிறது. கடந்த ஆண்டு ஜனவரியில், வானளாவிய மரங்களும், வயற்காடுகளும், நாசமானதைக் கண்டோம். இந்த ஆண்டோ, சாய்ந்தவை, மரங்களல்ல; மனித உயிர்கள். நாசமானது வயல்களல்ல; நடமாடும் அறிவுப் பண்ணைகள்.

இயற்கைப் புயலால் ஏற்பட்ட சேதம், மறைந்து வருகிறது—பட்ட மரங்கள் துளிர்த்துவிட்டன—புதுச் செடிகள், வளருகின்றன. ஆட்சிப் புயலால் விளைந்தசேதமோ, மண்ணுக்குள் பிணமாகிவிட்டது—காலொடிந்தும், கை முறிந்தும், கண்ணில் நீர் சிந்தியபடி—காட்சி தந்துகொண்டிருக்கிறது. அதுமட்டுமல்ல—இந்தச் சேதம் போதாதென்று, இன்னும் புயல் வீசிக்கொண்டேயிருக்கிறது — செய்நன்றி கொன்ற சிறுமதியாளர்களால். சிறைக்குள் பூட்டப்பட்டு சித்ரவதைகளை அனுபவித்தது மட்டுமல்ல — நமது செல்வங்கள் பலரின் வாழ்க்கையைக் கிள்ளிப் பறிக்கும் கெடுமதியுடன், வீசுகிறது, அதிகாரப் புயல்.

இது, ஓயாதெனும் அறிகுறியை, ஆட்சிபீடத்திலமர்ந்திருக்கும் அன்பர் ஆச்சாரியார், அறிவித்திருக்கிறார்—சென்னை மேல் சபையில். சலாம் என்பார், கேட்டாராம், "திராவிட முன்னேற்றக் கழகத்தவர்களின் மீது தொடர்ந்திருக்கும் வழக்குகளையெல்லாம் சர்க்கார், வாபஸ் பெறுமா?," என்பதாக. அப்போது, அத்தகைய உத்தேசம் தமக்கில்லையென்பதைத் தெரிவித்திருக்கிறார், ஆச்சாரியார். ஏழுமாதகாலமாக நெல்லைச் சிறையில் கிடந்துழலும் தூத்துக்குடித் தாயவர்களையும், திருச்சி வழக்கு மன்றத்தில் கூண்டில் நிற்கும் தோழர்களையும் விடுவிக்கும் உத்தேசம் இல்லையாம், அவருக்கு. "அவர்கள் மீதுள்ள வழக்குகளை வாபஸ் வாங்க வேண்டுமென்று மக்களிடம் பெருத்த கிளர்ச்சியிருக்கிறதல்லவா?," என்று அந்த மெம்பர் கேட்டிருக்கிறார். கிளர்ச்சியை மறுக்கவில்லை, ஆச்சாரியார்-எப்படி முடியும்?—எங்கு பார்த்தாலும்காண், காட்டுத்தீ போல், இந்த விஷயம் மக்கள் மனதை வாட்டுகிறதே! அதனால், கிளர்ச்சியிருப்பதை ஒத்துக்கொண்டு, "அதற்காக, குற்றத்திலிருந்து, அவர்களை விடுவிக்க முடியுமா?," என்று தெரிவிக்கிறார். குற்றங்களாம்! நாம், நமது நாட்டு மக்களின் நல் வாழ்வுக்காக, இந்த 'நல்லவரின்' கோளாக் கல்லைத் திருப்ப முயன்றது, குற்றமாம். கூறுகிறார், குல்லூகபட்டர். குற்றம் என்றால், அதனை எதிர்த்து பெருங் கிளர்ச்சி செய்ய, மக்கள் என்ன மண்டூகங்களா! மரக்கட்டைகளா!! வீட்டில் கன்னமிட்டவனையும், குடிசைகளைக் கொளுத்தியவனையும், குத்தி வெட்டி கொலை செய்பவனையும், விடுவிக்க—எப்போதாவது, இந்த மக்கள், பெருங் கிளர்ச்சி செய்ததுண்டா? காட்ட முடியுமா! ஏதோ, இவர்தான் 'நேர்மை'யின் தோழர் போலவும், நாட்டுமக்கள் யாவரும் நல்லது கெட்டது அறியாது குதிப்பவர் போலவும், தெரிவித்திருக்கிறார், இதனை. இந்த உள்ள உரத்தைத்தான் இவர் ஆட்சி பீடம் ஏறியது முதல் கண்டு வருகிறோம். இந்த உள்ள 'உரத்தால்'தான்—நாட்டு மக்களையெல்லாம் மண்டூகங்களென நினைத்து — தன்னுடைய கல்வித் திட்டத்தைப் புகுத்தி, 'தான்' எனும் அகம்பாவத்தில், தாறுமாறாகப் பேசி, கக்கியதையெல்லாம் மெல்லவும் முடியாமல், துப்பவும் முடியாமல், விழித்துக் கொண்டிருக்கிறார். இந்தத் திமிருக்கு, சட்ட சபையில், நிதியமைச்சர் சரணாகதி அடைந்து, மன்னிப்பும் கேட்க, நேரிட்டிருக்கிறது—இருந்தும், ஆச்சாரியாருக்கு, மக்களை மதியா மதோன்மத்தம், அகலவில்லை—அலட்சியத்தோடு, சொல்லியுள்ளார், "மக்கள் கிளர்ச்சிக்காக வாபஸ் வாங்க முடியாதென்று."

குற்றமெனக் கூறுகிறாரே, — வாதத்துக்கு ஒத்துக்கொள்வோம்—குற்றம் செய்தவர்களைக் கூண்டிலேற்று—வாதாடு— தண்டனைவாங்கிக்கொடு. இதுதானே நியாயம் — அவர் கூறும் 'குற்றவாளி'யாக நாமிருந்தால். அந்த நியாயம் எங்கே போயிற்று, 'ஐவர்' வழக்கில்! ஐவரையும்தான் தண்டித்தாய்— சிறையில் பூட்டினாய் — தண்டனையும் அடைந்துவிட்டு வந்துவிட்டார்கள். பின்னரும், வழக்கு போட்டிருப்பதேன்! இது நீதிமுறைக்கு உகந்ததா? வக்கீல்பட்டம் பெற்றதாலேயே தன்னுடைய பேச்சை, எல்லோரும் ஏற்றுக்கொண்டுவிடுவார்களெனும் எண்ணமா!! ஆச்சாரியாரின் இந்த நேர்மையற்ற போக்கை, நாம் எடுத்துச்சொன்னால், 'எதிர்க்கட்சிக்காரன்', எனும்பட்டம் சட்டசபையில் சுட்டிக் காட்டினார், தோழர் கே. டி. கோசல்ராம், அவர் எதிர்க்கட்சியாளா! காங்கிரசின், தலைவர்களில் ஒருவர் — எம். எல். ஏ. அவர், கூறினாரே, "ஆச்சாரியார், அநாவசியமாக, நீதிவிவகாரங்களிலெல்லாம் தலையிடுகிறார். இந்தப் பேயாட்சியை எப்படிச் சகிக்க முடியும்?" என்பதாக. கோசல்ராம், கழகக்காரரையல்ல! காங்கிரஸ் தலைவர்!! அவர் குற்றஞ்சுமத்துகிறார், ஆச்சாரியார்மீது — 'நீதி விவகாரங்களில் தலையிடுவதாக. அதுமட்டுமல்ல, அவருடைய ஆட்சியையும், 'பேயாட்சி' யெனக் கூறிக் கண்டிக்கிறார். சொந்தக் கட்சியிலிருப்போரே தூற்றுமளவுக்கு 'அலாதனை அழகை' நிர்வகிக்கும் ஆச்சாரியார், மக்கள் செய்யும் கிளர்ச்சிக்கு மாசு கற்பிக்க முனைகிறார்! வழக்கு, விசாரணையிலிருக்கிறது. கோர்ட்டு விசாரணையில் குறுக்கிடுவது, தவறு. ஆனால், இந்தக் குல்லூகபட்டர், குறுக்கிடுவதுமட்டுமின்றி, 'குற்றப்பட்டமும்' சுமத்துகிறார்.

இந்தக் கோணல்மதி, ஆச்சாரியாரின் உள்ளத்தைப் பிரதி பலிக்கிறது. 1953ம் ஆண்டில், அவர் அரசு அதிபராயிருந்தபோதுதான், இயற்கைப் புயலாலும், வறுமைப் புயலாலும் வாடிய மக்களுக்காகப் பணிபல புரிந்தோம். அந்தப் பணியின் பயனையும் பலனையும், 'கல்கி' ஏடே, பாராட்டிற்று—டில்லிமந்திரி கிருஷ்ணமாச்சாரியாரே வியந்தார், தறித்துணி விற்பதால், மில் துணி வியாபாரம் மந்தமாகிவிட்டதெனக் கூறி!

விட்டு விட்டுக் கொட்டும் தேள் போல், திராவிடத்து மக்களை அலைக்கழிக்கும் 'ஆதிபத்யப் புயலிலிருந்து' மீட்க முனைகிறோமென்பதற்காக — தடியடி, குண்டுமாரி, பிணக்குழி, சிறைச்சாலை—இத்தனையும் தந்தவர், இன்னும் ஆர்ப்பரிக்கிறார். நம்மவர்கள், கொடிய தண்டனைக்குள்ளாகவேண்டுமாம்.

நன்மைகள் பல புரிந்தும், நாம் தாக்கப்பட்டிருக்கிறோம், கடந்த ஆண்டில். 'அதே முறைதான் இனியும்' என்று தம் உள்ள எரிச்சலை வெளியிடுதன்மூலம் உணர்த்துகிறார், நமக்கு. பரவாயில்லை. இது போன்ற மிரட்டல்களையெல்லாம் தாண்டியே, நாம் நடைபோட்டு வருகிறோம். ஆச்சாரியாருக்கு அவருடைய ஆட்சிமீது ஆசை! நமக்கோ நாட்டின்மீது பற்று!! ஆட்சி ஆசையால், நம்மீது பாய்கிறார்—இவர்கள் வளர்ந்துவிட்டால் நமது சுகபோக சாண்டல் நீடிக்கமுடியாதே!-எனும் கலக்கத்தில். இதனைக் காணும் போது, இலட்சியவாதியின் முகத்தில், புன்னகையே பூக்கும். அதனையே, அவருக்கு நம்முடைய புத்தாண்டுப் பரிசாக அளிப்போம்.

நாம், புயலால் வாடியவர்களிடையில், அமைதி ஏற்படப் பாடுபட்டிருக்கிறோம். எனவே, அதிகாரப் புயல் வீசினால், அதினின்றும் காப்பாற்றிக்கொள்ள முடியும் இந்தப் புயல் எப்போதும் வீசமுடியாது! 'புயல்' விரைவில் மறையக்கூடியது—புயலுக்குப் பின், எப்போதும், அமைதி நிச்சயம். புயலை வரவேற்போம்! அடிக்குமட்டும் அடிக்கட்டும்!! — அதற்குப் பின், அமைதி உண்டு. ஆச்சாரியாரின் தர்பாருக்குப் பின், வெற்றி நிச்சயம், நமக்குண்டு. இந்த உறுதியுடன், 'ஆதிக்கப் புயலை'த் தாங்கிக்கொண்டுவரும் 1954க்குள் நுழைவோம்.

★

'தூத்துக்குடி' வழக்கு

நடைபெற்று வருகிறது

வழக்கை நடத்தத் தேவையோ
ரூ. 20 ஆயிரம்!

*

கிடைத்திருப்பதோ ரூ 10 ஆயிரம்

*

மீதியை,
தோழர்காள்! தொழிலாளர்காள்!!
உங்களிடம்தான்
தி. மு. க. எதிர்பார்க்கிறது.

*

முகவரி:—
அ. பொன்னம்பலனார்,
'அறிவகம்'
ராயபுரம்,
சென்னை.

★ பொங்கற் புது நாளில் கைத்தறி ஆடைகளையே அணிவோம் ★

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்பார்க்காமல் தேவையான மின்சாரத்தை இந்த லிக்னைட் மூலமே அடையலாம். உடனடியாக தற்போது சென்னை மாகாணத்தில் இருக்கும் தெர்மல் ஸ்டேஷன்களுக்குக்கொண்டு வரப்படும் நிலக்கரிகளுக்கு ரயில் கூலியாகக் கொடுக்கப்படும் 17½ லட்சம் ரூபாய் மிஞ்சும். பஞ்சாலைகளிலும், வீடுகளிலும் இந்த லிக்னைட் உபயோகப்படுத்தப்படலாம். அதன்மூலம்நமது நாட்டுச் செல்வம் வளரும். இப்படி லிக்னைட்டைப்பற்றி ஆராய்ந்தால் பல லாபங்கள் தென்படுகிறது!"

இப்படியெல்லாம் யாரோ திராவிட வாதி பேசவில்லை. மத்திய அரசாங்க உயர் அதிகாரி, விஞ்ஞானி பேசியிருக்கிறார்.

மற்றொரு பொருளாதாரநிபுணர் வட இந்திய பத்திரிகையொன்றில் தீட்டியுள்ளார்,

"நெய்வேலியில் கிடைக்கும் லிக்னைட் சுலபமாக தீப்பிடிக்கிறது. ஆகவே ஆலைகளுக்கு அது அதிகமாக பயன்படும். இந்த லிக்னைட் தோண்டும்பொழுது கிடைக்கும் மற்ற உபபொருள்களோ எண்ணற்றவை. அதில் கிடைக்கும் உபபொருள்களில் ஒன்றான மெழுகு மின்சாரக் கம்பிகளுக்கும்மராசாமான்களுக்கும் மேல்பூசவும், யுத்த தளவாட உற்பத்திக்கும் பயன்படுமாம். இப்பொழுது அரிதாகவும் டன் ஒன்றுக்கு 17,00 ரூபாய் பெறுமானதுமான இந்த மெழுகு, கிடைக்கும் லிக்னைட்டில் 15 பாகம் உபபொருளாக தென்படுகிறது. இதோடு, பத்து லட்சம் லிக்னைட்டிலிருந்து அறுபது லட்சம் டன் "தார்"உம் கிடைக்கிறது என்று ஆராயப்பட்டுள்ளது. இத்துடன் வட இந்தியாவிலிருந்து டன் ஒன்றுக்கு ரூ. 30 வீதம் கொடுத்து வரவழைக்கப்படும் நிலக்கரியைவிட டன்னுக்கு பாதி விலையில் தென்னிந்தியாவிலேயே லிக்னைட்டை கிடைக்கச்செய்யலாம். தென்னிந்தியாவிற்குத் தேவையான அறுபது லட்சம் டன் நிலக்கரியையும் இந்த நெய்வேலித் திட்டம் நிறைவேற்றப்பட்டால் கொடுக்கலாம். அதுமாத்திரமில்லை, தோண்டியெடுக்கப்படும் லிக்னைட்டை சரியானபடி உபயோகித்தால் பெட்ரோலியம் பொருள்களையும், பெட்ரோலையும்கூட தயாரிக்கலாம். பொதுவாக மதராசில் தொழிற்புரட்சி வரவேண்டுமானால், லிக்னைட் தோண்டப்படவேண்டும்!"

இப்படி நாமா, எழுதுகிறோம்? இல்லை. வடநாட்டில் வங்கத்திலே இருக்கும் ஆங்கில ஆலை முதலாளிகளின் சார்பாக வெளிவரும் "கேபிடல்" (மூலதனம்) என்ற பத்திரிகை கூறுகிறது.

திராவிடத்தின் செல்வங்கள் கணக்கிடப்படாதவை. தோண்டப்படாத லிக்னைட்டும், சேலத்திலே பூமிக்கடியில் கிடக்கும் இரும்பும், திருவிதாங்கூரிலே ரோடிலே கிடக்கும் தோரியமும் (அணு ஆராய்ச்சிக்கு முக்கியமான உலோகம்) இன்னும் சரியாகப்பயன்படுத்தப்படாத கூடூர் மைகாவும் இப்படி குறைவற்ற செல்வங்களுமுண்டு. முறையாக ஆராய்ச்சி நடத்தினால் எவ்வளவோ கிடைக்கும்.

ஆனால் இவைகள்எதையும்செய்ய நேரு சர்க்கார் தயாராயில்லை. டில்லியிலிருந்துகொண்டு அவர்கள் கண்ணுக்குத் தெரிவதெல்லாம் தக்ஷிணத்திற்கு மேலேதான்.

இந்த பாரபட்சம் ஏன் என்றால் விஞ்ஞானிகளும் அறிவாளிகளும் ஒத்துக்கொள்ளாத காரணத்தைக் கூறுகிறார்கள்.

உண்மையிலேயே இந்தியா ஒன்று என்று எண்ணியிருந்தால் தொழில் வளத்தில் பிற்போக்கில் வதியும் தென்னாட்டில் ஒருதொழிற்சாலையையாவது நிறுவியிருக்கமாட்டார்களா, நேரு சர்க்கார். நிறுவாவிட்டாலும், என்ன மமதையிருந்தால் குருப்ஸ் கம்பெனியோடு நாலு கோடியில் எஃகு ஆலை ஆரம்பிப்பார்கள். இங்கே நெய்வேலியில் பழுப்புத் தங்கம் கண்ணுக்குத் தெரிந்தும் எடுக்கப்படாமல் கிடக்கும்போது, திராவிடம் தூங்குகிறது என்ற தைரியத்திலேதான் எல்லாத் திட்டங்களையும் வடநாட்டிலே ஆரம்பிக்கின்றனர்.

கேட்டால் "ஒன்றுபட்ட இந்தியா! பாரத் வர்ஷம்!!" என்று பழம் பெருமையைக் கூறி, தைரியமாகவடநாட்டுத்திட்டங்களின்முன்னேற்றத்தை படமாக்கிக் காட்டுகின்றனர். நாள்தோறும் நாமும் பார்த்துவிட்டு இந்தியா வளர்கிறது என்று கூறிவருகிறோம்.

கூட்டு வியாபாரம் நடத்தியவர்களில் வலுத்தவன் இளைத்தவனை ஏமாற்றி கடைக் குமாஸ்தாவாக்கி, முடிவில் பிச்சையெடுக்க அனுப்புவதுபோல், இந்த நேரு சர்க்கார் திராவிடத்தை பிச்சைக்கார நிலைக்குத்தான் தள்ளிவிடும். இராசகோபாலாச்சாரிகள் தங்கள் நலத்தையும், தலைமைப் பதவியையும்எண்ணி நம்மை அந்த நிலைக்கு வேகமாக அழைத்துச் செல்கின்றனர்.

விரைவில் இதற்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். வடநாட்டு முதலாளித்துவப் பிடி பலமாகிக் கொண்டேபோகிறது. ஞாபகமிருக்கட்டும்!

★

வேலூரில்
ஐவர் வரவேற்பு கூட்டம்

வ.ஆ.மா. சார்பில் நடைபெறும்

நாள்: 3-1-54 மாலை 5-மணிக்கு

தலைவர்

ஏ. எல். சி கிருட்டிணசாமி

சி. என். அண்ணதுரை, இரா. நெடுஞ்செழியன், ஈ. வே. கி. சம்பத், கே. ஏ. மதியழகன், என். வி. நடராசன் பேசுவார்கள்.

எல்லாக் கிளைக் கழகங்களும் தூத்துக்குடி நிதியுடன் வரவேற்பில் கலந்துகொள்ளவும்.

ஏ. எல். சி. கிருட்டிணசாமி,

தி. மு. க. மாவட்ட செயலாளர்.

வரப்பெற்றோம்

காஞ்சிபுரம் பிரபல பட்டு & சரிகை வியாபாரம் பி. எஸ். கே. சன்சாரால் வெளியிடப்படும் அழகான பெரிய அளவுக்காலண்டர் வரப்பெற்றோம்.

"எம்பாவாய்! – எம்பாவாய்!"

["வண்டு"]

வைகறைப் பொழுதில், 'கீசு, கீசென்று ஆனைச் சாத்தம் கலந்து பேசுகிற பேச்சரவம்' கேட்கிற நேரத்தில்; பெய்கிற பனி உடம்பில் வியாதியை உண்டாக்கிவிடுகிறதோ எனும் பயத்தில், தலையில் முக்காடிட்டுக்கொண்டு, கையிலே சேமங்கலம் ஏந்தித் தட்டியபடி செல்லும் தாசரி. "எம்பாவாய்! எம்பாவாய்! எல்லே இளங்கிளியே! இன்னும் உறங்குதியோ?," என்று பாடிக் கொண்டு போனால்; ஏதோ வயிற்றுப் பிழைப்புக்கு அவன் பாடிக் கொண்டு போகிறான், என்று கருதலாம். ஆனால்; இப்போது சிலர், அந்தி மயங்கும் வேளையிலே, அழகான பந்தலில், குந்த மேடையும், குடிக்கப் பாலும், எதிரே ஒலி பெருக்கியும், ஏறிவரக்காரும் வைத்துக்கொண்டு, 'திருப்பாவை! திருவெம்பாவை!!' என்று செப்பிய வண்ணம் திரியத் தலைப்பட்டிருக்கிறார்கள். 'சிலர்' எனில், சில்லரைகள் அல்ல—நோட்டையும் தங்கத்தையும் அடிக்கடி எண்ணிப்பார்க்கும், தம்பிரான்கள். அவர்களுக்கு, 'பக்க வாத்தியமாக,' உயர்நீதி மன்றத்து நீதிபதிகளும்,'ஊறுகாய்,' போல மந்திரிமார்களும் துணை சென்றுகொண்டிருக்கிறார்கள். 'திருப்பாவை'யில் சொட்டும் வைணவ ரசத்தையும், 'திருவெம்பாவை'யில் ததும்பும் சைவச் சாரத்தையும், ஒன்றாகக் கலந்து, உலகம் உய்விக்கச் செய்யப் போகிறார்களாம், இவர்கள்!

உலர்ந்து போன கட்டைகளை, வீட்டின் ஓரமாகத்தான் ஒதுக்கி வைப்பார்கள், எவரும். அதுபோல, எங்கெங்கோ, ஒதுக்கிக் கிடந்த இவர்களெல்லாம் ஒன்று சேர்ந்து உட்கார்ந்துகொண்டு, 'சூடிக் கொடுத்தாளி' பெருமையையும் அவள் 'கோட்டுக்கால் கட்டிற்மேல்- கொத்தவர் நப்பின்னை........மேல் வைத்துக் கிடந்த மலர் மார்பா!,' என்று வர்ணிப்பதன் அழகையும், பேசிப் பேசி, ரசத்தை அருந்தி அருந்தி, களைத்துக் கலைகின்றனராம்!

'புறம்போக்கென' ஒதுக்கித் தள்ளப்பட வேண்டியோர், வீட்டிற்குள் உட்கார்ந்தபடி, 'அரியையும் அரனையும்' துதியாமல், அம்பலத்துக்கு வந்து, 'எம்பாவாய்! எம்பாவாய்!!,' என்று கூவத் துவங்கியிருக்கிறார்கள். இந்தத் 'தளிரில்லா மரங்களின்' திருச்சபை நோக்கி, அண்மையில், நமது அருந்திரு ஆச்சாரியார் சென்றிருந்தாராம். சங்கூத இடமும், கேட்க நாலு பேரும் இருந்தால், அவா எங்கு போகவும், தவறுவதில்லையே, இது போதும்! எனவே, போயிருக்கிறார். உயர்நீதி மன்றத்து நீதிபதி ஏ.எஸ். பி. அய்யர் வரவேற்க, தர்மபுர மடப் பிரதிநிதி உபசரிக்க, 'பாவாய் மாநாட்டில்' கலந்துகொண்டு பேசியிருக்கிறார்.

அப்போது, அழுத்தந் திருத்தமாக வெளியிட்டிருக்கிறார். "உலகத்திலேயே பக்தியை உண்டாக்கி வளர்க்கக் கூடிய நூல்கள், திருப்பாவை — திருவெம்பாவை தவிர வேறில்லை" என்று.

உலகம் என்றாரே, இவர், உலகத்தில், எந்தெந்த நூல்களைப் பற்றி அறிவார் என்றெல்லாம் கேட்காதீர்கள். சொன்னார், அவர்—அவ்வளவுதான்! அவர் சொல்லியதிலுள்ள நயத்தை—சிறிது நீங்கள் ரசிக்கவேண்டும்.

உலகத்திலுள்ள ரஷ்யா, அமெரிக்கா போன்ற இடங்களில், அணு சக்தியை 'உண்டாக்குவதா'—அதிக உணவுப் பயிரை 'வளர்ப்பதா' என்று ஆராய்ச்சியில் மூழ்கிக்கிடக்கிறார்கள். ஆனால் நமது ஆச்சாரியாரோ பக்தியை 'Produce' செய்து 'Distribute' செய்வது எப்படியென்பதுபற்றி, ஆலோசனை வழங்குகிறார்! "மார்கழி மாதம் என்றால், தெரியுமா? பகவான், மதங்களில் மார்கழியும் நானே!" என்றார். அவர் குடிகொண்டிருக்கும் மாதம் இது, என்பதை நினைவில் வைத்து ஆச்சாரியார் வெளியிட்டிருக்கிறார் "இந்த மாதம் பக்திக்குச் சரியான மாதம். இந்த டிசம்பர் மாதமே சந்தோஷப்படக்கூடிய மாதம். எங்கு பார்த்தாலும் பிரசங்கங்கள்—சங்கீதம்—கூட்டங்கள் எல்லாம் நடைபெறுகின்றன."

இந்த மாதம் 'பகவானின்' மாதம்! ஆகவே, சந்தோஷப்படக் கூடிய மாதம்!! — தியாகராய நகரிலுள்ள தம்பிரான் மண்டபத்திலிருந்தபடி, ஆச்சாரியார் கூறுவது, இது. அவரை, அங்கேயே, விட்டுவிட்டு—அவரது ஆட்சிக்குள்ளிருக்கும் நாட்டின் பக்கம், சென்றுவருவோம். இந்த மாதத்தில், நடைபெற்ற, சில நிகழ்ச்சிகள், இதோ: 'சுதேசமித்திரன்' இதழிலிருந்து, 10-தேதிவரை, எடுத்தவிபரம்:-

1—12—53

கோட்டூர் விசுவநாத கோயிலில் திருட்டு. விக்ரகங்களும் சாமான்களும் களவு.

வீரவநல்லூர்: மாடுகளைக் கொன்று, தோலைக் கொண்டுபோய் விற்க முயன்ற சிலர் கைது.

2—12—53

நெல்லை: வறுமையின் கொடுமையால், தன்னிரு குழந்தைகளையும் குளத்தில்தள்ளி, தற்கொலை செய்து கொள்ளமுயன்ற கொம்பம்மாளுக்கு ஆயுள் தண்டனை.

நாகை: சடைசியில் கன்னம் வைத்துத் திருடிய வழக்கில் ஒருவருக்கு 3 வருடக் கடுங்காவல்.

3—12—53

திருமலை: வெங்கடேஸ்வரர் கோயிலில் உபயநாச்சியாரின், ரூபா 500 மதிப்புள்ள தங்க 'ஹஸ்தம்' களவு.

குத்தாலம்: பாஸ்கர ராஜபுரம் கோயில் மூலவிக்ரங்களின் அடியிலிருந்து நவரத்னங்கள் களவு.

4—12—53

சென்னை: சேத்துப்பட்டுக் கருகில் 22 வயதுள்ள காசி என்ற எஸ். எஸ். எல். சி. படித்த மாணவன், வேலையில்லாக் கொடுமையால், மின்சார ரயிலில் விழுந்து, தற்கொலை.

கீழ்ப்பாக்கம்: டெலிபோன்கம்பி களை திருடி விற்க முயன்ற இருவர் கைது.

கோடம்பாக்கத்தில்: ஜேபடி செய்த ஒருவன் கைது.

5—12—53

சுவாமிமலை: கொள்ளை வழக்கு சம்பந்தமாக ஐவர், செஷன்ஸ் கோர்ட்டுக்கு கமிட் செய்யப்பட்டனர்.

கோபி: சிருங்கேரி மடத்து ஜகத் குருவுக்குச் சொந்தமான வெள்ளிக் குடம் திருட்டுப் போய்விட்டது.

6—12—53

கோடம்பாக்கம்: தையற்காரரை திருடர்கள் பலர், குத்திக் காயப் படுத்தி, பணத்தைப் பறித்தனர்.

7—12—53

வாகைகுளம்: வியாபாரிகளை மடக்கி ரூபா 150 கொள்ளை.

சென்டிரல்: ஸ்டேஷனில்திரிந்து கொண்டிருந்த 42 பேர் கைது.

மின்னல்: நூல்பேல் திருடியதற்காக சிலர் கைது.

9—12—53

திருமங்கலம்: கோவிலிலிருந்த ரூபா 200 பெறுமானமுள்ள மணிகள், திருட்டு.

வாலாஜா; பீஞ்சிரோட்டில் வழிப்பறி.

அரிமழம்: கன்னக்கோல் வைக்க முயன்ற திருடன் கைது.

10—12—53

சாத்தனூர்: ஆனந்த கௌரி அம்மனுக்கு அடியிலிருந்த பொன் முதலிய விலையுயர்ந்த கற்கள் களவு.

ராயபுரம்: மன்னார்சுவாமிகோவில் தெரு, பெருமாள் என்பவர், பணத் தொல்லை காரணமாக, உத்திரத்தில் சுருக்குப் போட்டுக்கொண்டு தொங்கினார்.

இவைமட்டுமா! இரண்டு தினங்களுக்கு முன்பு, ஈரோட்டில், தன்னுடைய குழந்தைகள்-மனைவி-முதலியோருடன், தானும் விஷமருந்தி விட்டு, செத்திருக்குகிர், ஒருவர்! பத்து பேர்-சாவு. காரணம், வறுமை. இந்தச் சம்பவங்கள் யாவும், ஆச்சாரியார் குறிப்பிடும் ஆனந்தம் நிரம்பிய இந்தத் திங்களில்தான். மேலே கொடுத்திருப்பது—பத்து நாள் பத்திரிகையில வந்தவை. இன்னும் பத்திரிகைக்கு எட்டாமல் எத்தனையோ! திருடோ! கொலைகளோ! தற்கொலைகளோ!

இத்தனையும் நடைபெறக் காரணமென்ன? வறுமை! ஏழ்மை!! இதனை மறந்துவிட்டு, மார்கழிபோதனையில் ஈடுபடுவதால், மார்கழிதான் வளருமா — பக்தியைத்தான் உண்டு பண்ணமுடியுமா? பசிவந்திடப் பத்தும் பறந்துவிடுமே! அப்போது அவனுக்குக் கோயில் கலசமாயிருந்தாலென்ன—அம்மன் மூக்குத்தியாயிருந்தாலென்ன—பசித்தால், எடுக்கத் தயங்குவதில்லை. கிடைக்காத போது, தற்கொலை செய்துகொண்டு மாள்கிறான்.

இது, நாட்டின் நிலை. இதனை எண்ணாமல், 'மார்கழியும், நானே!' என்று 'பாவாய்! பாவாய்!!' என்று இன்னிசை கலந்து, உரத்த குரலில் பாடுவதால், என்ன பயன் காணமுடியும்? தொண்டைக்குத்தான் சேதம்! பால் காசுதான் நஷ்டம்!!

அங்கே! நடந்தது,

ஏமாற்றத்தோடு திரும்பினராம்! இதுவரை, ஒருமுறைகூட, இப்படித் திரும்பியதில்லையாம்! அரசியல் கிளர்ச்சிகள் அதிகமாகக் கிடக்கும் பிராந்தியங்களுக்குப் போனபோதுகூட, இப்படித் திரும்பியதில்லையாம்!—விசாரத்தோடு, ஓர் செய்தி, வெளியிடப்பட்டிருக்கிறது.

பண்டிதநேரு எங்கு சென்றாலும், அதைப் படம் எடுத்து, திரைப் படங்களில் காட்டுகிறார்களல்லவா, இந்திய செய்தி இலாகாவினர்—அவர்களுக்குத்தான் இத்தகைய ஏமாற்றம் ஏற்பட்டிருக்கிறது. படம் எடுக்கப்போன இடத்தில் அவர்களை எடுக்கவொட்டாமற் தடுத்து, மக்கள் துரத்தியிருக்கிறார்கள்; இவர்களைமட்டுமல்ல, பண்டித நேருவையுங்கூட!

தன்னுடைய பரிவாரங்கள், படம் எடுக்கும் இலாகா, புடைசூழ, பண்டிதநேரு, சென்றிருக்கிறார். பாவம்! எதிர்பார்த்தபடி, நடக்கவில்லை. அவர் மேடைமீது ஏறி, இரண்டு வார்த்தை சொல்லுமுன்னரே, கலாட்டா ஆரம்பமாகி, கூட்டம் நடக்கவில்லை—'நேருவே, திரும்பிப் போ', என்ற கூச்சல் அதிகமாகி—கலவரமும் ஏற்பட்டிருக்கிறது.

கலவரம் செய்தவர்களின் தலைவர் இதனைக் கண்டதும் பண்டிதர் இருந்த மேடைக்கு விரைந்திருக்கிறார். பண்டிதருக்கும், மேடையிலிருந்தோருக்கும், பயம்போய், தெம்புவந்திருக்கிறது. தலைவரைக் கண்டால், கலவரம் செய்வோர் அடங்கிவிடுவார்களல்லவா? அந்த நம்பிக்கையிலிருந்திருக்கின்றனர்! ஆனால் வந்த தலைவர், நேராக நேருவிடம் போனார் — ஒலிபெருக்கிக் கருவியைப் பிடுங்கிக்கொண்டார்—'நேருவே, பேசாதே' என்றுரைத்தார்.

யாரிந்த துணிச்சலான, ஆசாமி—என்று கேட்பீர்கள். சம்பவம், பண்டிதர் வந்தபோது, மதுரையிலோ—மேட்டுப்பாளையத்திலோ — நடக்கவில்லை. வடநாட்டில்—பஞ்சாப்பில்—சீக்கியர்கள் வாழும் பிரதேசத்தில், பாடியாலாவுக்கருகில் நடைபெற்றிருக்கிறது. சீக்கியர்களின் 'க்ஷேத்ரம்' ஒன்றுக்குச் சென்றாராம், பண்டிதர்—சீக்கியரின், சினம் தணியும் எனும் எண்ணம்போலும். ஆனால், அவர்களோ 'ஏ! நேருவே, எங்கட்கு, தனிநாடு கொடு. அதைக் கொடுக்காமல் இங்கே வராதே' என்று முழக்கமிட்டனராம். அதைக் கண்ட நேரு, புன்சிரிப்பு, தந்தாராம்! அந்தக் காட்சியைக் கண்டபோது, புன்சிரிப்பா, வந்திருக்கும்? அதிலும் மேடைமீதேறி ஒலிபெருக்கியை சீக்கியர்களின் தலைவராம் தாராசிங்கே, பிடுங்கும் போது!

நேரு, என்னென்ன நினைத்தாரோ — முகம் எப்படியெல்லாம் மாறிற்றோ — அதைப் பார்க்க வேண்டுமென்று, ஆசையாயிருக்கிறது. ஏனெனில், நாம்தான் காட்டுமிராண்டிகளாயிற்றே! அந்த நாகரீக மக்களைப் பற்றி அறிய ஆசை உண்டாகத்தானே செய்யும்?

அந்தவாய்ப்பு ஏற்படாமலே செய்து விட்டார்கள், சீக்கிய இளைஞர்கள். படம் எடுக்க வந்தோர் மீது பாய்ந்து விரட்டியிருக்கிறார்கள். நேருவின் சந்தோஷக் காட்சிகளையே எடுத்துப் பழக்கப்பட்ட, அவர்களுக்கு, இதுபோன்ற காட்சி, வாய்ப்பது கஷ்டம்தான்! அதற்கும் சந்தர்ப்பமில்லாது, அடித்துத் துரத்தியிருக்கிறார்கள், சீக்கிய இளைஞர்கள்!!

4-ம் பக்கத் தொடர்ச்சி

முறைகளைக் கையாண்டார் என்பதை நாடு முழுவதுமே அறியும். என்றபோதிலும், "எனக்குப் பதவியிலிருந்து விலகும் சந்தர்ப்பம் ஏற்படவில்லை — ஏற்படுத்தப்படவில்லை என்ற கவலையாகவே இருக்கிறது" என்று, நெருப்புக்கோழி மணலில் தலையை மறைத்துக்கொண்டது போலவும், பூனை தன் கண்ணை மூடிக்கொண்டு பாலைக் குடித்தது போலவும், ஆச்சாரியார் தம்முடைய 'அருமையான மூளை பலத்தை' அளந்து காட்டுகிறார்.

சட்டசபையில் உள்ள பெரும்பான்மை உறுப்பினர்கள் ராஜிநாமாச்செய்யும்படி வற்புறுத்தினார்கள்—சந்தர்ப்பம் கிடைத்தது.

நண்பர் காமராஜர் தமிழ்நாட்டுக் காங்கிரசின் பிரதிநிதியாக, ஆச்சாரியாரின் வீடு தேடிச்சென்று, ராஜிநாமாச்செய்யும்படி கேட்டுக்கொண்டார்—சந்தர்ப்பம் ஏற்பட்டது.

85க்குமேற்பட்ட காங்கிரஸ் எம். எல். ஏ.க்கள் கையொப்பமிட்டு டில்லிக்கு மகஜர் அனுப்பி ராஜிநாமா செய்யச் சொல்லும்படி பண்டித நேருவைக் கேட்டுக்கொண்டார்கள். —சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டது.

என்றாலும் கூறுகிறார், சந்தர்ப்பம் ஏற்படவில்லையே என்ற கவலை தம்மை வாட்டி வதைப்பதாக.

என்ன பெருந்தன்மை! எவ்வளவு தியாக உணர்ச்சி!! எத்தனை ஜனநாயகப் பண்பு!!! இப்படி ஒரு ஒரு புனித உள்ளம் படைத்த புண்ணியவானை இனி எந்தக் காலத்தில் காணமுடியும்!!!!

*

ஆச்சாரியார் பதவியில் இருக்க வேண்டி அவரை ஆதரிப்பதற்காக மாநாடு கூட்டியவர்களைப் பார்த்து மேலும் பல கூறித் தமக்கு ஆதரவு திரட்டும் பணியை வெகு ஜரூராகச் செய்திருக்கிறார்.

"என்னதான் தைரியம் இழக்காமல் இருந்தாலும், இந்தத் தேசத்தை எப்படி ஆளுவதென்பது கவலைப்படக் கூடியதாக இருக்கிறது. அமெரிக்கா இங்கிலாந்து போன்ற நாடுகளின் அரசாங்கத்தை நடத்த வேண்டுமென்றால் சுலபமாக நான் சம்மதித்து விடுவேன்"

என்று வேறு பேசித் தொலைத்திருக்கிறார். அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் கொல்லைப்புற வழியே கிடையாதே! அந்த பகிரங்கமாக முன்வாசலால்தான் நுழைய முடியும், எவ்வளவு நெருக்கடியும் ஆள் பஞ்சமும் ஏற்பட்டபோதிலும் அங்கெல்லாம் கொல்லைக் கதவைத் திறந்து ஆளை உள்ளே சேர்ப்பதில்லையே! அங்கெல்லாம் ஜனநாயகத்துக்கு மதிப்புக் கொடுக்கும் பண்பு ஓரளவாவது இருக்கிறதே! அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் மற்றக் கோவிந்தர்களை எந்தக் காரணத்தைக் கொண்டும் மந்திரியாக்கமாட்டார்களே! ஆச்சாரியாரின் குட்டிக் கதைகளோடு கூடிய குட்டிக்கரணப் பிரசங்கத்தை அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் உள்ளவர்கள் கேட்டால் இவர் ஒரு மத-அரசியல் "சார்லி சாப்ளின்" என்று கேலி செய்வார்களே!

*

மேலும், ஆச்சாரியார், தம்முடைய தியாக உணர்ச்சியை வெளியிடுவதன்வாயிலாகவும், தமக்கு ஆதரவு திரட்ட முயன்றிருக்கிறார்.

"எனக்கு வக்கீல் தொழிலில் நல்ல வருவாய் இருந்தது. அதை ஏன் விட்டோம் என்று இப்போது தோன்றுகிறது. பொது வாழ்க்கைக்கு வந்த பிறகு கிடைத்தது என்ன? அடிதான். போலீஸ் அடி, ஜெயில். இலாபம் ஒன்றுமில்லை"

என்று கூறி அங்கலாய்க்கிறார். வக்கீல் தொழிலில் கிடைத்த வருவாய் மந்திரித் தொழிலில் கிடைக்கவில்லையே என்று ஆசையைத் துறந்த அந்தணர் செப்புகிறார்—சிந்தை மிக நொந்து விசனப்படுகிறார். பொது வாழ்க்கைக்கு வந்தபின்னர் கிடைத்தது அடியும் ஜெயிலும்தானாம்! இலாபம் ஒன்றுமே இல்லையாம்.

காங்கிரஸ் அகராதியில் தியாகம் என்ற சொல்லுக்கு இலாபம் என்றுதான் பொருள்போலும்! காங்கிரஸ் தியாகிகள்தான் ஐந்து ஏக்கருக்கு அடித்துக்கொண்டு சாகிறார்களே! எனவேதான் காங்கிரஸ் தியாகிகள் பட்டியலில் முதலிடம் பெற விரும்பும் ஆச்சாரியாரும், தாம் செய்த தியாகத்துக்கு ஏற்ற இலாபம் எதுவும் கிடைக்கவில்லையே என்ற கவலையால் கண்ணீர் விடுகிறார். பொதுமக்களின் பணத்தை இரட்டைச் சம்பளமாக வாங்கி ஏப்பம் விடும் ஆச்சாரியார், தாம் செய்யும் அரசியல் வியாபாரத்தில் இலாபம் ஒன்றும் இல்லையே என்று ஏங்குகிறார். கவர்னர் ஜெனரலாக இருந்ததற்காக ஆயிரரூபாய் பென்ஷன் வாங்கிக்கொண்டு, முதன் மந்திரியாக வேலை பார்ப்பதற்குச் சம்பளம் அலவன்ஸ் என்ற பெயரால் சில ஆயிர ரூபாய்களையும் வாங்கிக்கொண்டு "இலாபம் ஒன்றுமில்லை. பொதுமக்களே உங்களுடைய ஆதரவு இருந்தால், இந்தச் சிறிய வருவாயையாவது நான் பெற வழி உண்டாகும். எனவே, இலாபமே குறிக்கோளாக உள்ள இந்த இலட்சிய வாழ்வை எப்படியாவது காப்பாற்றுங்கள்" என்று கேட்டுக்கொள்ளுகிறார் தம்முடைய ஆதரவு தேடும் படலத்தை ஆச்சாரியார் இந்த அளவோடு நிறுத்திக்கொள்ளவில்லை. மேலும் சில கூறியுள்ளார். கஷ்டகாலத்தை விளக்குவதன்வாயிலாகவும் தம்முடைய ஆசையை நிறைவேற்றப் பார்க்கிறார்.

விரைவில் வெளிவருகிறது!

"ஷாஜஹான்—மும்தாஜ்" வரலாற்றை விளக்குவது கண்கவரும் கட்டிடச் சிற்பமான தாஜ்மகால்! "இளகாத இரும்பு இதயங்களையும் இளகச் செய்திடும்" வரலாற்றை விளக்குவது. திராவிடத்தின் பொதிய மலை மாளிகை!

வளை மாளிகை

(புதுமையான புத்தகம்)

தீட்டியவர்: திராவிட தீரன் எஸ். செல்லப்பாண்டியன்

GREENLAMP PUBLISHING HOUSE
SYED MOSQUE STREET
TENKASI, TIRUNELVELY DT

"நம் தேசத்திற்குக் கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கிறகாலம் இது.

தேசம் இரண்டாகப் பிரிக்கப்பட்ட காலம் இது.

பஞ்சம் முதலிய நெருக்கடிகள் ஏற்பட்ட காலம் இது.

விலைவாசி விஷம்போல் ஏறிய காலம் இது.

ஒன்று, இரண்டு, மூன்று அல்ல. பல கட்சிகள் ஏற்பட்ட காலம் இது.

ஒன்றாக இருந்த கட்சிகளும் தனித் தனியாகி இரண்டாகப் பிரிந்திருக்கும் காலம் இது.

மொத்தத்தில் பல கட்சிகள் ஏற்பட்டுப்போய் இருக்கும் காலம் இது.

காங்கிரசுக்குள் இருந்தவர்கள் பிரிந்துபோய்ப் புதுப் புதுக் கட்சிகளை வைத்துக்கொண்டு எதிர்க்கட்சிகளாக இருக்கும் காலம் இது."

என்றுகூறி, "எனவே என்னை ஆதரியுங்கள்" என்று கேட்கிறார். இதை நான் இட்டுக்கட்டிக் கூறுவதாக ஆச்சாரியாரன்பர்கள் கருதி என்மீது சரந்தொடுத்து விடவேண்டாம். ஆச்சாரியாரின் பூந்தமல்லிச் சொற்பொழிவை இன்னொரு தடவை வேண்டுமானாலும் படித்துப்பாருங்கள்

"இந்த மாதிரிக் கஷ்டமான காலத்தில் எனக்குத் தைரியம் சொல்லவேண்டி இப்படி ஏற்பாடு செய்வது பொருத்தமானதே"

என்று தெளிவாகவும், விளக்கமாகவும், சந்தேகத்துக்குத் துளியும் இடமின்றியும் பேசியிருக்கிறார். நாட்டுக்கு என்ன கஷ்டங்கள் ஏற்பட்டாலும் அதைப்பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் என்னை மட்டும் எப்படியாவது ஆதரியுங்கள், அது போதும் என்று அழுதழுது வேண்டிக் கேட்டுக் கொள்கிறார்—வேண்டுமானால் இன்னொரு தடவை அவரது பிரசங்கத்தைப்படித்துப்பாருங்கள்.

*

ஸ்ரீபெரும்புதூர்த் தாலுக்காப் பஞ்சாயத்தார்கள் பூந்தமல்லியில் அந்த மாநாட்டை ஏற்பாடுசெய்தது ஆச்சாரியாரை ஆதரிப்பதற்காம். இதனை அவரே ஒப்புக்கொள்கிறார்.

ஏற்பாடு—இந்தத் தமிழ்ச் சொல்லின் பொருள் என்ன? முன்கூட்டியே யோசித்து முடிவு செய்யப்பட்ட ஒன்றைச்செய்வது—அதற்கு வேண்டிய துணைக் கருவிகளைச் சேகரித்து நல்ல முறையில் அதைச் செய்து முடிப்பது என்பதுதான் அதன் பொருளாகும். "ஏற்பாடு எதுவும் இன்றி இந்தக் காரியத்தைச் செய்திருக்க முடியாது" "நல்ல முன் ஏற்பாட்டுடன் செய்யப்பட்ட காரியம் இது" என்று கூறப்படும் வாக்கியங்களே 'ஏற்பாடு' என்றால் என்ன பொருள் என்பதனைத் தெளிவாக விளக்கிக் காட்டுகின்றன.

எனவேதான் பூந்தமல்லியில் நடைபெற்ற பஞ்சாயத்தார்கள் மாநாடு, பஞ்சாயத்தார்கள் தங்கள் குறைகளை முறையிடுவதற்கு முன்னர், ஆச்சாரியார் தன்னுடைய குறையைப் பஞ்சாயத்தார்களிடம் முறையிடும் விதமாக மாநாட்டு நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன. முதலில், ஆச்சாரியார் தம்முடைய குறையை முறையிட்டு, தன்னை ஆதரிக்கவே அம்மாநாடு கூட்டப்பட்டதென்பதை விளக்கிவிட்டுப், பின்னர்தான் பஞ்சாயத்தார்கள் இன்னின்னபடியெல்லாம் நடக்க வேண்டும் — வரி அதிகம் கொடுக்க வேண்டும் — வண்டியில் போகக் கூடாது, நடந்தேதான் எல்லோரும் போகவேண்டும் என்று புத்திமதி கூறியுள்ளார்.

ஆசையைக் குறைத்து, வருவாயைப் பெருக்கி, அரசாங்கத்துக்கு வரி செலுத்தும்படி கேட்டுக்கொண்டார்.

ஆசையைக் குறைப்பதற்கு மேற்கோள் கூறவந்த ஆச்சாரியார், மக்கள் வாகனங்களில், அதாவது, கார், ரயில், கட்டை வண்டி, பிளேன் ஆகியவற்றில் போகும் ஆசையைத் துறந்து எல்லோரும் நடக்கக் கற்றுக்கொள்ளவேண்டுமென்று நல்லுரை வழங்கியுள்ளார். முன்காலத்தில், எல்லோரும் நடந்தே சென்றார்கள் என்றும், நடப்பது இந்தக் காலத்தில் மறக்கப்பட்டுவிட்டதென்றும் ஆச்சாரியார் ஆயாசப்பட்டு,

"கோழி பறக்க மறந்ததுபோல் தமிழ்நாட்டில் எல்லோரும் நடக்க மறந்துவிட்டார்கள்"

என்றுகூறி நடப்பதால் ஏற்படும் நன்மையை விளக்கியுள்ளார். கோழி பறக்க மறந்ததுபோல் நாம் (தமிழ் நாட்டவர்) நடக்க மறந்துவிட்டோமாம்! கோழி எப்போது பறந்தது—எப்போது பறக்க மறந்தது என்ற புள்ளி விபரத்தை ஆச்சாரியார் தரவில்லை. என்றபோதிலும் கோழி பறக்க மறந்ததைமட்டும் அறிந்திருக்கிறார். கோழி முன்காலத்தில் பறந்து, இக்காலத்தில் பறக்கமறந்துவிட்டதைப்பற்றி இங்குஆராயாவிட்டாலும், தமிழ் நாட்டவர்மட்டும் நடக்கமறந்துவிட்டார்கள், மற்றநாட்டவர்கள் எல்லோரும் இன்றைக்கும் நடந்துதான் எந்தக்காரியத்தையும் செய்கிறார்கள் என்பதற்காவது ஆச்சாரியார் புள்ளி விபரம் தரவேண்டாமா? அமெரிக்கா இங்கிலாந்து போன்ற நாடுகளையே ஆளும் திறமை தமக்கிருப்பதாக ஜம்பம் அடித்துக்கொள்ளும் ஆச்சாரியாரால் இந்தப் புள்ளி விபரத்தையா தரமுடியாது! "ஆச்சாரியாரின் அடுத்த ஆதரவுக் கூட்டத்தில் அவசியம் இதற்குப் புள்ளி விபரம் தருவார் அதற்குள் அவசரப்படுகிறீர்களே" என்று பக்கத்தில் நின்ற ஆபீஸ் பையன் சொல்லவே இந்த மேட்டரை இவ்வளவோடு ட்ராப் பண்ணவேண்டியதாயிற்று.

★

இப்படியும் நடக்கிறது!

விருந்தொன்றின்போது, விசித்திரமான விபத்து ஏற்பட்டிருக்கிறது, பிரிட்டிஷ் பிரதமர் சர்ச்சிலுக்கு. அவர் விருந்து மேஜையில் கிடந்த ஒரு தீப்பெட்டி, திடீரென தீப்பிடித்துக்கொள்ளவே, அவரது கை புண்ணாகி, இப்போது சிகிச்சையிலிருக்கிறார்.

*

கொரியாவில், சீனக் கைதிகளைப் பாதுகாத்து ஊருக்கு அனுப்பும் பணியிலீடுபட்டிருக்கிறார்களல்லவா இந்தியப் படையினர். அவர்கள் டிச 21-ந்தேதி, திகைக்கநேர்ந்தது. ஏனெனில், அவர்களின் பாதுகாப்பையும் தாண்டி சில சீனப் பெண்கள் வந்துவிட்டார்கள்! விஷயம் புரியாமல், இந்தியப் படையினர், விழித்தனர். கடைசியில் புரிந்தது. கைதிகளே, அந்த உடையில் வந்து நின்றனராம்!

மனக் குரங்கைத்தான் மதிப்பாராம்!

[சட்டசபையில் பட்ஜெட் விவாதம் நடைபெற்ற பொழுது தோழர் கோவிந்தசாமி எம். எல். ஏ. அவர்கள் பேசியதன் சுருக்கம் இங்கு தரப்படுகிறது]

"இந்தவரவு செலவுத்திட்டத்தை நான் ஒரு கண்துடைப்புத் திட்டம்தான் என்று கருதுகிறேன். கடந்த ஆறு ஆண்டுகளாக இந்த நாட்டில் பஞ்சம் அதிகரித்து வந்திருக்கிறது. அதற்கு அரசாங்கம் நல்ல மழை பெய்யவில்லை, அதற்கு நாங்கள் என்ன செய்ய முடியும் என்று சொன்னார்கள். இப்பொழுது மழை பெய்து அதனால் பஞ்சம் குறைந்து வருகிறது, உணவு நிலைமையும் சீர்பட்டுவருகிறது. உணவு, தான்ய விலைகள் குறைந்து வருகிறது என்று கனம் நிதி மந்திரி அவர்கள் சந்தோஷப்படுகிறார். இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில் தங்களுடைய நிர்வாகத் திறமையினால் நாட்டைக் காப்பாற்ற வேண்டுமே யொழிய இயற்கையினால் நாடு நன்றாகிவிட்டது என்று சொன்னால் இந்த நாட்டில் நாம் சர்க்காருக்கு நன்றி பாராட்டுவதாக இல்லாமல் இயற்கைக்குத்தான் நன்றி பாராட்டுவதாகும். அவர்களுடைய திறமைக்கு நன்றி பாராட்ட வேண்டியதில்லை.

கனம் நிதிமந்திரி அவர்கள் தன்னுடைய கோயம்புத்தூர் ஜில்லாவில் தேர்தல் காலத்தில் தான் சொல்லிவந்த வாக்குறுதியை நிறைவேற்றிவிட்டேன் என்று சொன்னார். குறிப்பாக அவர் சொன்னார், உணவுக் கட்டுப்பாட்டை எடுத்துவிட்டேன் என்றும், நெசவாளர்களுடைய குறைகளைத் தீர்த்துவிட்டேன் என்றும். இப்பொழுது கைத்தறி நெசவாளர்களுக்கு நன்மையைச்செய்யவேண்டுமென்று ஒருதீர்மானம் ராஜாஜிசர்க்கார்நிறைவேற்றி அதை மத்திய சர்க்காருக்கு அனுப்பிவைத்தது. அதை நேரு சர்க்கார் ஆதரித்ததா? 40-சதவிகிதமும் 60-சதவிகிதமும் கைத்தறிகளுக்கு ஒதுக்கிவிட்டால், கைத்தறி நெசவாளர்களுக்கு நன்மை செய்துவிட்டதாகச் சொல்ல முடியுமா? என்று கேட்கிறேன். எங்கு சென்று பார்த்தாலும் கைத்தறி நெசவாளர்கள் இன்றைய தினம் பிச்சை எடுக்கும் நிலைமையில்தான் இருக்கிறார்கள். ஆனால் கனம் நிதி மந்திரி சொல்லுகிறார் கைத்தறிநெசவாளர்களுடைய நிலைமையைச் சரிபடுத்திவிட்டேன் என்று! கோயம்புத்தூர் ஜில்லா, சேலம் ஜில்லா இவைகளை எடுத்துக்கொண்டால், மற்றும் தென்னாற்காடு ஜில்லாவை எடுத்துக்கொண்டாலும் கைத்தறி நெசவாளர்களுடைய நிலைமை மிக மிக மோசமாக இருக்கிறது. இது கனம் நிதி மந்திரி அவர்களுக்குத் தெரியவில்லை.

அவர் மறைத்துப் பேசுகிறார் என்றுதான் நான் கருதுகிறேன். உணவுக் கட்டுப்பாட்டை எடுத்துவிட்டோம் என்று பெருமைப்படுகிறார். அதனால் விலைவாசிகள் இறங்கி வருகிறது என்றும் சொல்லுகிறார். கட்டுப்பாட்டை எடுத்ததனால் விலைவாசிகள் இறங்குகிறது என்று சொல்ல முடியாது. மழை பெய்த காரணத்தால்தான் விலைவாசிகள் இறங்குகிறது. இப்பொழுது மழை பெய்ததினால் பணக்காரர்களுக்கு வசதி ஏற்பட்டிருக்கிறதே யொழிய, நடுத்தர விவசாயிகளுக்கும் நிலம் இல்லாத ஹரிஜனங்களுக்கும் எந்தவிதமான நன்மையும் ஏற்படவில்லை. மழை பெய்யாத காரணத்தால் ஏரிகளும், குளங்களும் வரண்டுவிட்டன. வாய்க்கால் சீரழிந்துபோன காரணத்தால் பஞ்ச நிலைமை ஏற்பட்டது. இப்பொழுது மழைபெய்தும் அவைகளில் தண்ணீர் தங்குவதற்கு வசதி இல்லை என்பதை அரசாங்கம் உணர்ந்து இருக்கிறது. அதற்கு வேண்டிய திட்டத்தை அரசாங்கம் செய்திருந்தால்—பஞ்ச நிவாரண வேலைகளைச் செய்திருந்தால் இந்த மழையைப் பயன்படுத்திக்கொண்டிருக்கமுடியும் என்பதை இந்த அரசாங்கம் உணரவேண்டும். இப்பொழுது நிலம் எல்லாம் பெரிய பணக்காரர்களிடமும் ஆயிரம் ஏக்கர்களைக் கொண்ட பண்டார சந்நிதிகளிடமும், மண் ஆசை பொன்னாசையில்லாத மடாதிபதிகளிடமும் தான் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் இருக்கின்றது. அந்த நிலங்களை எடுத்து ஏன் நிலம் இல்லாதவர்களுக்குக் கொடுக்கக்கூடாது என்று நான் ராஜாஜி சர்க்காரைக் கேட்கிறேன். காஷ்மீர், சைனா, ரஷ்யா போன்ற இடங்களில் நிலசீர்திருத்த சட்டம் கொண்டுவரப்பட்டது. அதைத் தெரிந்துகொண்டும் இந்த ராஜாஜி சர்க்கார் அதைச் செய்யவில்லை. அவ்விதம்செய்து நிலப்பிரபுக்களுடைய விரோதத்தை சம்பாதித்துக்கொள்ளக்கூடாதுஎன்றுராஜாஜி அவர்கள்நினைக்கிறார்கள்என்றுநான் கருதுகிறேன். நிலப்பிரபுக்கள் அரசாங்கம் இப்பொழுது நடக்கிறதே யொழிய ஏழை அரசாங்கம் இப்பொழுது நடக்கவில்லை என்று சொல்லுகிறேன்.

இராமநாதபுரம் ராஜா சொல்லுகிறார் தான் ஒரு சாதாரண மனிதன்தான் என்றும், தான் ஒரு நிலப்பிரபு இல்லை என்றும் சொல்லிக்கொள்ளுகிறார்.

*

இன்றைய தினம் காங்கிரஸ் அங்கத்தினர்கள் இந்த அரசாங்கத்தை ஆதரிக்கிறார்களா என்றால் இல்லவே இல்லை. அவர்களும் இந்த அரசாங்கத்தைக் கண்டிக்கத்தான் செய்கிறார்கள். அரசாங்கத்தின் கட்சிகூட இந்த அரசாங்கத்தை ஆதரிக்கவில்லை. அவர்கள் பேசும்போதுகூட அரசாங்கத்தின் குறைகளைச்சொல்லிவிட்டுதான் பேச்சை முடித்துக்கொள்ளுகிறார்கள். இதை அரசாங்கம் மறுக்க முடியாது.

இந்த நாட்டில் அடக்குமுறை ஆட்சிதான் அதிகரித்து வருகிறது. இப்பொழுது அரசியல் சட்டத்தை இயற்றியவர்கள்கூட சட்டத்தைமீற ஆரம்பித்திருக்கிறார்கள்.

இந்த அரசாங்கத்திற்கு இப்பொழுது எதிர்ப்புக் கோஷ்டி அதிகரித்து வருகிறது. தங்களுடைய

கட்சிக்குள்ளேயே — தங்களுடைய குடும்பத்திற்குள்ளேயே இப்பொழுது எதிர்ப்பு ஆரம்பித்துவிட்டது. கனம் கே. டி. கோசல்ராம் அவர்களும் வேறு சில மெம்பர்களும் அரசாங்கத்தைக் கண்டித்துப் பேசியதை ஒருவரும் மறுக்க முடியாது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் அண்ணாதுரை அவர்கள் மூன்றுமாதம் சிறையிலிருந்துவிட்டு வெளியே வந்திருக்கிறார். அன்றையதினம் வெள்ளைக்காரர்கள் ஆட்சி நடத்திய போதுகூட காங்கிரஸ்காரர்களுக்கு இத்தகைய தண்டனை விதித்தது கிடையாது. இன்றைய தினம் ராஜாஜி சர்க்கார் அண்ணாத்துரை அவர்கள்மீது மறுபடியும் தண்டனை விதிக்க வேண்டும் என்றும், அனுபவித்த தண்டனை போதாது என்றும், மீண்டும் சிறைப்படுத்தவேண்டும் என்றும் நடவடிக்கை எடுக்கிறார்கள். கனம் நிதிமந்திரியும் ஜெயிலில் இருந்தவர்தான். வெள்ளைக்காரர்கள் காலத்தில், இவர்கள் ஜெயிலில் இருந்தது போதாது மேலும் தண்டிக்கவேண்டும் என்று வெள்ளைக்காரர்கள் வழக்குத் தொடுத்தது கிடையாது. ஆனால், இன்றைய தினம் இவர்களே தண்டனை அடைந்தது போதாது என்றும், மேலும் தண்டிக்கவேண்டும் என்றும் நடவடிக்கை எடுக்கிறார்கள்.

ஏற்கனவே தண்டனை கொடுத்த அதிகாரிகளிடத்தில் இவர்களுக்கு நம்பிக்கை இல்லையா? என்று கேட்கிறேன். மேலும் ராஜாஜி ஒருசிறந்த வழக்கு அறிஞர் என்பது எல்லோருக்கும் தெரியும். அப்பேற்பட்டவர் கோர்ட் மாஜிஸ்டிரேட் கொடுத்த தண்டனை எல்லாம் போதாது, ரூ 500 அபராதம்விதித்தது எல்லாம் போதாது என்று சொல்லி இருக்கிறார். இந்தக் காலத்தில் அமைதியாக ஆட்சியை நடத்த வேண்டுமென்றால் எதிர்க்கட்சியை அடக்கிவிட முடியாது என்பதை சொல்லிக்கொள்ளுகிறேன். தூத்துக்குடியில் ரயிலை நிறுத்தியதற்காகச் சுட்டுவிட்டார்கள். டால்மியாபுரத்திலும் சுட்டார்கள். அதனால் ஒருவருக்கு ஆண் குறியே போய்விட்டது. இப்பொழுது அவரால் உலகத்திலுள்ள இன்ப சுகத்தை அனுபவிக்க முடியவே இல்லை. எதிர்க்கட்சியை அடக்கி ஆட்சி நடத்தவேண்டும் என்றால் அது முடியாது. எதிர்க்கட்சியை ஆதரித்து, எதிர்க்கட்சியைக் கேட்டு அரசாட்சி நடத்தினால்தான் ஆட்சி நன்மையாக நடக்கும். அவர்களை அடக்கிவிட்டு ஆட்சிநடத்தவேண்டுமென்றால், அது முடியாது என்பதை மீண்டும் எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். டால்மியாபுரத்தின் பெயரைக்கல்லக்குடி என்று மாற்றவேண்டும் என்பதாகச் சொன்னால் அதற்கு "ஏற்கனவே அதற்கு டால்மியாபுரம் எனப் பெயர்கொடுத்தது தவறு என்றும், அவ்விதம் கொடுத்துவிட்டபின் இப்பொழுது அதை மாற்றவேண்டும் என்று சொல்வதும்தவறு" என்றும் கனம் முதல் மந்திரி சொல்லுகிறார். அப்பொழுது மக்கள் விருப்பப்படி மாற்றியது என்றும் சொல்லுகிறார்கள். ஏன், இப்பொழுதும் மக்கள் விருப்பப்படி அந்தப் பெயரை மாற்றக்கூடாது என்று கேட்கிறேன். தூத்துக்குடி வழக்கை வாபஸ் வாங்க வேண்டும் என்று ஆயிரக்கணக்கான மகஜர்கள் வந்திருக்கின்றன. தூது கோஷ்டிவந்தும்கூட-மந்திரிகளுக்கு விண்ணப்பங்கள் அனுப்பியும்கூட கருப்புக்கண்ணாடி போட்டுக்கொண்டிருக்கும் காரணத்தால்—எழுத்துக்கள் தெரியாத காரணத்தால் பேசாமல்இருக்கிறார்கள்.

என்னுடைய தொகுதியிலுள்ள சிலகுறைகளையும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். என்னுடைய தொகுதியாகிய விக்கிரவாண்டியில் ஒரு ஹைஸ்கூல் கூடக் கிடையாது. அங்கு ஹைஸ்கூல் வேண்டுமென்று மக்கள் கேட்டும் கூட இன்னும் ஹைஸ்கூலைக் கட்டவில்லை. பொதுமக்கள் ஒத்துழைக்கத்தயாராக இருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் ரோடு வசதிகிடையாது. மேலும் என்னுடைய தொகுதியில் குடிக்க நல்ல தண்ணீர் கிடையாது. ஆனால், பிரசாரத்திற்கு மந்திரிகள் செல்லுகிறார்கள்.

காங்கேயம் தேர்தலில் இவர்களுக்குப் பொதுமக்கள் பதில் சொல்லிவிட்டார்கள். விருத்தாசலத்தில் இவர்கள் என்ன சொன்னார்கள்? காங்கிரஸ்காரர்களுக்கு வோட்டுப்போட்டால் நன்மை கிடைக்கும் என்று சொன்னார்கள். காங்கிரஸ் எதிர்ப்புக்காரர்களுக்கு வோட்டுப் போட்டால் அவர்கள்வந்துசும்மா பேசலாமேயொழிய ஒன்றுமே செய்யமாட்டார்கள் என்று கனம் நிதிமந்திரி அவர்கள் சொன்னார்கள். ஆகவேதான் நான் சொல்லுகிறேன் ஜனங்களைப்பயமுறுத்திவோட்டுகள் வாங்கிவிடலாம் என்று நினைக்க வேண்டாம். கல்வித்திட்டம்வந்த பிறகு விருத்தாசலத்தில் பாடம் கற்பித்திருக்கிறார்கள். காங்கேயத்தில் பாடம் கற்பித்திருக்கிறார்கள்.

ஒரு விஷயத்தை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். குறைந்த செலவில் கல்வியைப்பரப்ப வேண்டும் என்று இந்த திட்டத்தைக் கொண்டுவந்தார். ஆனால் பருலேக்ர் கமிட்டி என்ன சொல்லி இருக்கிறது? அது அதிகச் செலவிற்கு வழிகாட்டுகிறது. ஆசிரியர்களுடைய சம்பள உயர்வு வேண்டும் என்று அது கூறுகிறது. பருலேகர் கமிட்டி திட்டத்தை பரிசீலனை செய்தார்களேயொழிய, மக்களைக் கேட்கவில்லை. இந்தத்திட்டத்தைஎதிர்த்து வரும் திராவிட முன்னேற்றக் கழகத்தைக்கேட்கவில்லை. காங்கிரஸ் எம். எல் ஏக்களே அதை எதிர்த்தார்கள். அவர்களையும்கேட்கவில்லை.

காங்கிரஸ்காரர்களிடையே 85 பேர்கள் எதிர்க்கும்போதுஏன்அவர் போகமாட்டேன் என்கிறார். கேட்டால் அவர் சொல்லுகிறார் தன்னை தன்மனக் குரங்கு போக வேண்டாம் என்று சொல்லுகிறது என்று. அவர் மனக் குரங்கிற்கு மதிப்புக் கொடுக்கிறாரேயொழிய மக்களுக்கு மதிப்புக் கொடுக்கவில்லை" என்பதாகப் பேசி முடித்தார்.

★

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi St., Kancheepuram.